Registered No. M. 2330 'SIDDHANTHAM'
Vol. 26—No. 6

136

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே'

மலர் 26 | விஜய ஆனி 1953 ஜூன் | இதழ் 6

உள்ளுறை

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| சமாஜ அறிக்கைகள் | | |
| காட்டு ஒலி | ... | 241 |
| நெல்வாயில் - அரத்துறை | ... | 248 |
| சிவப்பிரகாசம் மூலமும் உரையும் | ... | 250 |
| இயற்கையின் ஒரு காட்சி | ... | 260 |
| திருமந்திரமும் உலகியல் செய்திகளும் | ... | 261 |
| வேண்டுதல்—வேண்டாமை | ... | 270 |
| உண்மை... | ... | 277 |
| ... | ... | 284 |

Rb73 m3 11, N28
M53.26.6.
186891

இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
...யர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சித்தாந்த மகா சமாஜம்
58, திருவ... ...தெரு (ஜோன்ஸ் ரோடு). சைதாப்பேட்டை, சென்னை-15

## சமாஜ அலுவலக மாற்றம்

சமாஜத்தின் அலுவலகம் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது :

**192, லாயிட்ஸ் ரோட்,**
**இராயப்பேட்டை, சென்னை-14**

இனி எல்லாக் கடிதப் போக்குவரத்தும்

திரு. ச. சிவகுமாரன், M. A.,
காரியதரிசி,
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
192, லாயிட்ஸ் ரோட்,
இராயப்பேட்டை, சென்னை-14.

என்னும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

* * *

சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் செயற்குழு 17-5-53 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில், திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் கூடி, திராவிடக் கழகத்தினரின் விநாயகர் உருவ உடைப்பு முயற்சி நம் மக்களிடையே மனக்கொதிப்பையும் பிளவையும் உண்டாக்குமென்றும், அத்தகைய செய்கை சட்ட விரோதமானது என்றும் குறிப்பிட்டு, மேற்படி யோசனையைக் கைவிடவேண்டுமென்று திராவிடக் கழகத்தின் தலைவர்களைக் கேட்டுக்கொள்வதாகவும், அப்படி ஷை கழகத்தார் தம் யோசனையை நிறைவேற்ற முற்படுவார்களானால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு அரசாங்கத்தை வேண்டிக்கொள்வதாகவும் தீர்மானம் நிறைவேற்றியது.

இத்தீர்மானம் பத்திரிகைகளுக்கும், அரசாங்கத்திற்கும், மடாதிபதிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தினிடமிருந்து சமாஜத் தலைவரவர்களுக்குப் பிரத்தியேகமாகப் பதில் வந்தது.

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு

மலர் 26 | விஜய ஆனி 1953 ஜூன் | இதழ் 6

## நாட்டு ஒலி

### 1. குழப்பம் :

உலகத்தில் பொதுவாக நமது நாட்டில் எங்கு பார்த்தாலும் குழப்பங்கள் தோன்றி வருகின்றன. அரசியல் துறையிலும், பொருள் ஆதாரத் துறையிலும் குழப்பங்கள் தோன்றுவது இயற்கை. இரண்டு பெரிய உலக யுத்தங்கள் தோன்றியதின் விளைவாக அரசியல்களிலும், பொருள் ஆதாரங்களிலும் நெருக்கடிகள் தோன்றுகின்றன. போர்கள் நின்று அமைதி தோன்றிவிட்டது என்று பெயரளவில் கூறுகிறோம். தற்போது கொரியாவிலும், இந்து சீனாவிலும் நடைபெறுகின்ற போர்கள் அமைதியைக் காட்டுகின்றனவா? எகிப்து தேசத்தின் சூயஸ் கால்வாயைப் பற்றித் தோன்றியிருக்கும் நெருக்கடி எப்படிப்பட்டது! வல்லரசுகளில் ருஷியாவுக்கும், அமெரிக்காவுக்கும் ஏற்பட்டிருக்கும் கருத்துச் சண்டை அமைதியைக் காட்டுகின்றதா? அங்கே கருத்துச் சண்டை மனத்தோடும் வாக்கோடும் நிற்காமல் செயல் அளவிலும் ஓங்கி வருகின்றது. ஒருவர்மீது ஒருவர் வெற்றி அடையும் பொருட்டு தற்காப்பு என்ற சாக்கு வைத்துக்கொண்டு அணுகுண்டு முதலிய கட்டுக்கடங்காத போர்க் கருவிகளை உண்டுபண்ணுவதில் போட்டியிட்டுக்கொண்டு நிற்கிறார்கள். சில பேர்கள் பணத்தில் விருப்பு அடைந்துகொண்டு இருக்கிறார்கள். பெரும்பான்மையான பேர் வேலையின்றி, உணவின்றி வாடு

கிறார்கள். இந்த நிலைமை உலகமெங்கும் பரவியிருக்க நமது நாட்டிலோ அது மிகவும் கொடுமையாக இருக்கின்றது. மக்கள் படும் துயரத்திற்கு அளவேயில்லை. இந்த நிலைமையில் நாட்டு நிலைமை இருக்க, இந்தக் கொடுமை போதாது என்று எண்ணியோ, தங்கள் சுயநலத்தைக் கருதியோ, பொதுமக்களின் ஊழியர்கள் என்று சொல்லிக் கொண்டு சில ஆட்கள் சமயத்திலும் புகுந்து குழப்பங்களை உண்டுபண்ணுகிறார்கள். சமயங்கள் மக்களை இழிவுபடுத்தி அடிமை ஆக்குகின்றன என்று சொல்லிக்கொண்டு அவ் வடிமைத்தனத்திலிருந்து மீட்டுகிறோம் என்று வாய்ப்பறை அடித்துப் பொதுமக்களுடைய மனோநிலைமையை அலைக் கழிக்கிறார்கள். இந்த அலைக்கழிப்பு நாளுக்குநாள் பெருகிக்கொண்டு வருகிறது. நிலைத்த தொழில் இல்லாத சில பேர் சீர்திருத்தம் என்பதே ஒரு தொழிலாக வைத்துக் கொண்டு மக்களிடை பணம் பிடுங்கிப் பிழைக்கிறார்கள். சீர்திருத்தம் என்னும் பெயரினால் இப்படிப்பட்ட மக்கள் தேச சேவகர்கள் என்ற பட்டம் பூண்டுகொண்டு மக்களில் சஞ்சலத்தையும், அமைதியின்மையையும் புகுத்தி வருகிறார்கள். இது தமிழ் நாட்டில் சிறப்பாக நடைபெறுகின்றது.

## 2. சமய நிலைமை :

நமது பாரத தேசம் சமய மேம்பாட்டிற்குப் பேர் பெற்றது. பண்டைக்காலம் முதற்கொண்டு கடவுள் கொள்கை, சமயத்தில் பற்று இவைகள் நமது நாட்டில் சிறப்பாக இருந்து வந்தன. வடநாட்டைக் காட்டிலும் தென்னாட்டில் சமயப்பற்று மிகுதியாக இருந்திருக்கின்றது. சமயக் கொள்கைகள் நாளுக்கு நாள் வளர்ச்சி யடைந்து கல்வி கற்ற அறிஞர்களே யன்றிப் பாமர மக்களும் சமயப் பற்றில் ஈடுபட்டிருந்தார்கள். அதன் பயனைச் சமயநிலையங்கள் நாடெங்கும் தோன்றின. அந்நிலையங்களே பின்வந்தவர்களைச் சமயப்பற்றில் நிறுத்தி வைத்தன. சமயங்களுக்காகப் பிறநாட்டிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் தோன்றிய எதிர்ப்புகள் அச்சமயங்களை அழிக்க முடியவில்லை. உதாரணமாக சமணமும் பௌத்தமும் வைதீக சமயங்களைத் தாக்க முடியவில்லை. பிறநாட்டுச் சமயங்களால் சில சடங்குகளும் நடவடிக்கைகளும் மாறினவே யன்றி நாட்டுச் சம

186891



யங்கள் வலியுறுத்தப் பெற்றன. சோழ சாம்ராஜ்ய காலம் சமயாசாரியர்களுடைய முயற்சியினால் வைதீக சமயங்கள் முன்னேற்ற மடைந்தன. சமய நிலையங்களும் பெருவாரியாகத் தோன்றி நாட்டை அலங்கரித்தன. சில நூற்றாண்டுகளில் மேற்கு நாடுகளிலிருந்து இசுலாமியமும், கிறிஸ்தவமும் வந்தன. அம்மதங்களுடைய தாக்குதல் மிகவும் கடூரமாக இருந்தது. அப்படியிருந்தும் வைதீக சமயங்கள் சீர்கெடவில்லை. நாகரிகத்தில் முதிர்ச்சியடையாதிருந்த சில தாழ்ந்த மக்கள் மட்டும் புறமதங்களுக்குச் சென்றார்கள். பெரும்பான்மையான மக்கள் சைவ வைணவங்களிலேயே இருந்துவருகிறார்கள். பிறநாட்டுப் பிரசாரத் தாக்குதல்கள் வைதீக சமயங்களில் யாதொரு புரட்சியும் செய்ய முடியவில்லை. இப்படியிருக்கையில் நமது நாட்டிலேயே பல பெரியார்கள் தோன்றிச் சமய வாழ்க்கையில் ஈடுபட்டார்கள். அவர்களுடைய உபதேச மொழிகளைக் கேட்டுப் பொது மக்கள் சமயத்தில் நல்ல நம்பிக்கை கொண்டு தங்கள் வாழ்க்கையை நலமாக்கிக் கொண்டார்கள். இவ்வாறு சீர் திருத்தப் பெரியோர்களில் வடநாட்டில் இராமமோஹன ராயரும் இராமகிருஷ்ண பரமஹம்சரும் சிறந்தவர்கள் ஆவார்கள். அதுபோலவே தென்னாட்டில் இராமலிங்க சுவாமிகள் போன்ற பெரியவர்கள் மிக விளக்கமுடன் பணி செய்தார்கள். இந்த முயற்சியின் பலனைக் கணக்கற்ற சமயக் கழகங்கள் தோன்றிப் பணியாற்றின. நாடெங்கும் சமய மாநாடுகளும், கூட்டங்களும் நடைபெற்றன. பொதுவாக மக்களிடை சமய ஆர்வம் பெருகத் தொடங்கியது. ஆலய வழிபாடுகளும், அதற்காக ஏற்பட்ட சங்கங்களும் வேலை செய்தன. இந்த நிலைமையில் சமயத்தில் ஒருவித அமைதி ஏற்பட்டது.

## 3. எதிர்ப்பு இயக்கம்

இந்த அமைதியானது வெகு நாள் நிலை நிற்கவில்லை. அரசியல் மாறுதல்களின் விளைவாலும், பொருள் ஆதார நெருக்கடியாலும், பெரும்போர்களின் பிற்கால விளைவுகளாலும், நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டதென்று முன்னமே குறித்தோம். இவைகள் காரணமாக வறுமை ஏற்பட்டுக் குழப்பங்கள் தோன்றின. இவைகளுக்கெல்லாம்

காரணம் சோம்பேறித்தனமும், மடமையும் என்று எண்ணி அவ்விரண்டு கேடுகளும் சமயங்களினால் முளைத்தன என்று சிலபேர் நினைக்கத்தொடங்கினார்கள். அவ்வாறு நினைத்தவர்கள் இக்கேடுகளைப் போக்க எண்ணிச் சமூகக் கொள்கைகளைத் தொலைத்துச் சமய நிலையங்களை அழிக்க முயலுகிறார்கள். இப்படிப்பட்ட இயக்கங்களில் முக்கியமானது தன்மதிப்பு இயக்கம். ஒரு சிறந்த பெயரில் தோன்றியிருக்கும் இந்த இயக்கம் தன் ஆழம் தெரியாது சென்று கொண்டிருக்கும் வரையில், சடங்குகளையும் கொள்கைகளையும் ஒன்றாக மயங்கிச் சடங்குகளைத் தொலைக்க எண்ணும்போது சிறந்த கொள்கைகளையும் அது தாக்குகின்றது. ஒழுக்கத்திற்குக் காரணமாயிருக்கின்ற புனித நூல்களை அழிக்கின்றது. வளர்ச்சிக்கு ஆதாரமாயிருக்கும் நற்கலைகளையும் உருவ வழிபாட்டையும் சீரழிக்கத் தொடங்குகிறது. இந்த முயற்சியைப் பாமரமக்கள் எளிதில் பற்றிக் கொள்ளுகிறார்கள். வறுமைக்கு அதுவே காரணமென்று சுலபத்தில் நம்பிக்கை ஏற்பட்டுவிடுகின்றது. புது இயக்கத்தால் சின்னஞ் சிறு குறைபாடுகளைப் பெரிதாகச் சித்திரித்துக் காட்டுவதனால் ஏழைமக்கள் அவ்வலையில் சிக்கி எளிதில் விழுந்து விடுகிறார்கள். மக்களின் மனப்பான்மையை உணர்ந்து அவ்வியக்கத் தலைவர்கள் சுலபத்தில் புரட்சிகள் செய்ய மூட்டிவிடுகிறார்கள். இந்த முறையில்தான் தற்போது தன்மதிப்பு இயக்கம் செல்லுகின்றது. அண்மையிலே மக்களுக்கு ஒவ்வாத சில செய்திகளைச் செய்த வகையில் பெருந்தோல்விகளை உற்ற அவ்வியக்கத் தலைவர்கள் எங்கே உலகம் தங்களை மறந்துவிடுகின்றதோ, எங்கே தங்கள் வயிற்றுப்பாட்டிற்கு அடிவிழுகின்றதோ என்று அஞ்சிப் புதிதுபுதிதான பிரசார வேலைகளில் ஈடுபட நினைக்கிறார்கள். தற்போது மேற்கொண்டிருக்கும் நூதனமான திருவிளையாடல் மிக வேடிக்கையானது. அது கஜினி மாமூது என்ற கொடிய கொள்ளைக்காரனைக் காட்டிலும் ஒரு படி மீறி இருக்கின்றது. சிறுபிள்ளைகள் அறியாத் தன்மையினால் பொம்மைகளை உடைக்கிறாற் போலத் தன்மதிப்புத் தலைவர் பிள்ளையார் உருவங்களை மண்ணிலே செய்து உடைக்கப் போகிறாராம். இதனைக் குழந்தை விளையாட்டன்றி வேறு என்ன என்று சொல்ல முடியும். கஜினி மாமூது



உடைத்த புனித உருவங்கள் எல்லாம் இப்போது பல்லாயிரக்கணக்கில் ஓங்கி மிளிர்கின்றன. அவைபோல இனி தன் மதிப்புத் தலைவர் உடைக்கும் பிள்ளையார்கள் தகுந்த புனிதக் கொள்கைகளுடன் மக்கள் மனங்களை நல்வழிப் படுத்தும் அல்லவா ?

### 4. நாளதுவரை செய்த செயல்கள் :

இந்த விக்கிரக நிக்கிரகர் நாளது வரை செய்த திருவிளையாடலில் எவ்வாறு தோற்றார் என்பதை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவோம். இந்தி இயக்கம் கூடாதென்று பறை சாற்றின இப்பெரியார் அதனை விலக்குவதற்குத் தகுந்த மற்றொரு இயக்கத்தை (உதாரணமாக தமிழ் இயக்கத்தை) கொண்டு வராமல் ஒரு பயனுமில்லாமல் புகைவண்டி நிலையங்களில் எழுதப்பட்டிருந்த இந்திப் பெயர்களைத் தாரினால் பூசச் சொன்னார். அதை முழுவதும் உணராத அவருடைய சீடர்கள் அரைகுறை மனத்தோடு ஒன்றிரண்டாகத் தார் பூசினார்கள். அரசியலோ அதைக் கவனிக்கவில்லை. சிறுபிள்ளைகள் விளையாடட்டும் என்று விட்டு விட்டார்கள். இவர்கள் விளைவித்த நஷ்டம் புகைவண்டி அலுவலுக்கு ஒரு கொசுக் கடிதான். பலகைகள் அசுத்தமானதைத் தவிர வேறு விளைவு ஒன்றும் ஏற்படவில்லை. அழித்த சிறுபிள்ளைகளுக்குக் கோபம் வந்தது. மனக் கசப்போடு சும்மா இருந்துவிட்டார்கள். இந்தி இயக்கம் பெருகிக் கொண்டு போகின்றது. தினசரித் தாள்களில் பார்த்தால் எத்தனை இளைஞர்கள் இந்தியில் தேறுகிறார்கள் என்று அறியலாம். தார் பூசுவதை விட்டு விட்டுத் தமிழ்மொழி வளர்த்தி யிருந்தால் எத்தனை புகழ் ஏற்பட்டிருக்கும் ? இளைஞர்களுக்கு எத்தனை நன்மை ஏற்பட்டிருக்கும். எடுத்துக் கொண்ட காரியத்தில் தோல்வி உற்றால் எத்தனை மனக் கசப்பு ஏற்படும். இதைச் சொல்லவும் வேண்டுமா ?

### 5. தற்போதைய திருவிளையாடல் :

ஜூன் மீ 27-ம் தேதி ஒரு திருவிளையாடல் நடத்தப் போகின்றாராம். அதனை எல்லா இடங்களிலும் பறையடித்துக் கொண்டிருக்கின்றார். மண்ணினால் பிள்ளையாரைச் செய்தோ, கடையிலிருக்கும் பிள்ளையாரை விலைக்கு

வாங்கியோ கழகங்களிலும், வீடுகளிலும் அதை உடைப்பாராம். அப்படி உடைக்கும்போது ‘நீதான் எங்கள் இழிவுக்குக் காரணம்’ என்று அதைத் தூற்றிவிட்டு உடைப்பாராம். இதைக் கேட்டால் சிறுபிள்ளைகளும் சிரிப்பார்கள். இந்த விளையாட்டினால் இவர் எடுத்துக் கொண்ட காரியம் மீண்டும் தோல்வி அடையப் போகின்றது. இச்செய்தியைக் கேட்ட முதல் அமைச்சர் ‘தற்போது கடவுள் நம்பிக்கை அற்ற இதே பெரியார் விரைவிலே பெரிய கடவுள் அன்பர் ஆகப் போகின்றார்’ என்று கூறினார்கள். இறைவன் திருவுருவின் பேரில் கல் எறிந்த சாக்கியநாயனார் சிவனடியார் ஆகவில்லையா? மேலும் பெரும்பான்மையான பேர் புனிதமாகக் கொண்டிருக்கும் ஒரு உருவத்தை அவமானப் படுத்துவதனால் பார்ப்பவர் மனம் புண்ணாகும். அவ்விதம் செய்வது ஓர் தண்டிக்கத்தக்க குற்றம் என்று இந்தியக் குற்றச்சட்டம் கூறுகின்றது. அரசியலார் அதனை சிறுபிள்ளைத் தனம் என்று கவனிக்காமலும் விட்டுவிடலாம். அதனால் விளையும்படியான மனக்கசப்பினால் இவர்கள் வேறு என்ன செய்வார்களோ அறியோம். அருள்நெறித் திருக்கூட்டத்துச் செயலாளரும் ஓர் அவசரச் சுற்றறிக்கை விடுத்திருக்கின்றார். அதன்படி ‘கடவுள் கொள்கை உடையோர் இவ்விழிவுச் செயல்களைக் கண்டு பொருட்படுத்தப் படாதென்றும், அக்கூட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாதென்றும், அன்று தாங்கள் தனியாகக் கூடிப் பிள்ளையார் துதிப்பாடல்களைப் பாராயணம் செய்யும்படிக்கும்’ வேண்டிக்கொள்கின்றார். இவ்வாறு பாராமுகமாயிருந்து விட்டால் அவ்வியக்கம் தானே இறந்துபடும்.

## 6. பழைய படிப்பினை :

மக்கள் செய்யும் செயல்களுக்கெல்லாம் அவரவர்களுடைய மனப்பான்மையே காரணமாகும். மனிதன் ஓர் உருவத்தை இயற்றுகிறான். அதில் அவன் கொள்ளும் மனப்பான்மையே அதற்குச் சிறப்புத் தருகின்றது. அதை மண் என்று நினைத்தாலும் நினைக்கலாம். புனித உருவமென்று நினைத்தாலும் நினைக்கலாம், மண் என்று நினைக்கிறவனுக்கு அது மண்ணாய்த்தான் தோன்றும். புனிதம் என்று நினைக்கிறவனுக்கு அது புனிதமாய்த்தான் தோன்றும். உருவவழிபாட்டின் தத்துவத்தைப் பலபேர் அறியமாட்டார்கள். விஞ்ஞானம் உயர உயர உருவ வழிபாடும் விரிந்து கொண்டுதான் செல்லுகின்றது. அதனைத் திருமூலர் வெகு நன்றாகக் காட்டியிருக்கின்றார். சிறுபிள்ளைத் தனத்தினால் உருவ வழிபாட்டை அழிக்க முடியாது. விவேகாநந்த சுவாமிகள் ஒருமுறை ஒரு மன்னரைப் பார்க்கப்போன காலத்தில் ‘அறிவாளிகள் உருவ வழிபாடு செய்யலாமா’ என்று அம்மன்னர் கேட்டார். அதற்குச் சுவாமிகள் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த மன்னரின் படத்தை எடுத்து அமைச்சரிடம் கொடுத்து அதன் பேரில் காறி உமிழச் சொன்னார். அமைச்சன் வெகுண்டு போய் அதை இராஜத் துரோகமல்லவா என்று விடை சொன்னான். அதைக் கேட்டு சுவாமிகள் ‘ஒரு மனிதனுடைய உருவம் வரைந்த ஒரு காகிதத்திற்கே இத்தனை மகிமை இருந்தால் எல்லாம் வல்ல கடவுளின் உருவத்திற்கு என்ன மதிப்புக் கொடுக்க வேண்டும்’ என்று சொன்னார். இந்தச் சிறு சம்பவத்தின் பொருள் தெரியாதவர்களும் உலகத்தில் இருக்கிறார்கள்.



## 7. மற்றொரு எடுத்துக் காட்டு:

பண்டைத் தமிழ் நூல்களில் சிறு பஞ்சகாவியங்களில் யசோதர காவியம் என்ற அருமையான நூல் என்று இருக்கின்றது. அதில் ஒரு சிறுகதை கூறப்பட்டுள்ளது. பண்டைக் காலத்தில் மன்னர்கள் ஆடு கோழி முதலிய உயிர்களைப் பலியிட்டு வேள்விகள் நடத்தி வந்தார்கள். மகாவீரரும் கௌதம புத்தரும் உயிர் வதையைக் கண்டித்தார்கள். அருக சமய உபதேசங்களைக் கேட்ட ஒரு அரசன் உயிர் வதையை நிறுத்தினான். ஆனால்தான் நடத்திவந்த வேள்வியிலே எல்லாச் சடங்குகளையும் அவன் நிறுத்த உடன்படவில்லை. அமைச்சர்களின் சொல்படி கோழியைப் போல மாவினால் ஒரு உருவம் செய்து அதை அறுக்கும்படி ஏற்பாடு செய்தான். அவன் மனப்பான்மை என்ன என்று கூறமுடியவில்லை. மாவினால் செய்த கோழியை அறுக்கும் போது அது ‘கூ’ என்று ஒலி செய்துகொண்டு கீழே விழுந்ததாம். அதைக் கண்ட அரசனுக்குப் பொறுக்க முடியாத துயரம் ஏற்பட்டதாம். அந்தக் கதையை இத்துடன்

நிறுத்திக் கொள்வோம். இதன் படிப்பினை என்ன ? சிந்தித்துப் பாருங்கள்.

மண்ணினால் செய்த பிள்ளையாரை உடைக்கிற மக்கள் எல்லாம் ஒரே மனப்பான்மை உடைவர்கள் அல்லர் ; பலர் மடநெஞ்சம் படைத்தவர்கள். இதனை ஒரு விளையாட்டாகச் செய்யலாம். வேறு ஒரு மனப்பான்மை பெற்றவர்கள் இதனால் சஞ்சலமும் அடையலாம். விக்கிரக நிக்கிரகம் செய்த கஜினி மாமூது இறக்கும் தருவாயில் கொள்ளைப் பொருள்களைப் பார்த்துக் கண்ணீர் உகுத்து இத்தனையும் விட்டுப் போகின்றேனே என்று அழுதானாம். உண்மை என்ன ? இதனைப்போல நெஞ்சு வலிமையற்ற தன்மதிப்புச் சீடர்கள் இந்தப் பயனற்ற செயலைச் செய்துவிட்டுப் பின்னால் நெஞ்சழிந்து துயருற்றுப் பச்சாத்தாபப் படுதலை எவரே பார்த்துச் சகிப்பார்கள். இவர்கள் பகுத்தறிவைப் பயன்படுத்திக்கொண்டு நல்ல செயல்களில் ஈடுபடுவார்களாக !

---

## தலப்பகுதி

# நெல்வாயில் - அரத்துறை

(கோவைகிழார்)

## 1. இடம்:

இந்தத்தலம் தென்ஆற்காடு வட்டத்திலே திருத்தூங்கானைமாடம் என்று பெயர்பெற்ற பெண்ணாகடம் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே 4-கல்லில் நிவாநதி என்று வழங்கும் வெள்ளாற்றின் வடகரையில் இருக்கின்றது. வெள்ளாற்றிலிருந்து வரும் வெள்ளம் ஊரின் பேரில் அடிக்காமலிருக்கும் பொருட்டுக் கொம்பணை ஒன்று பெரிதாகக் கட்டப்பட்டுள்ளது. அந்த அணை சிற்சில இடங்களில் உடைபட்டுப் போய் அபாய நிலையில் இருக்கின்றது. ஊர் சுமாரான ஊர். கோயிலைச் சுற்றிலும் நான்கு மாடவீதிகள் கொண்டது. பெரும்பாலும் மட்டை வீடுகள் கொண்ட ஊர் ஆகையினால் நான் சென்றகாலத்தில் கணக்கற்ற வீடுகள் தீக்கு இரையாய்ப் போயின. ஊரைச் சுற்றி நிலங்கள் செழிப்பாக இருக்கின்றன. வெள்ளாற்றிற்கு வடக்கே சிறிது தொலைவில் ஓர் அணை கட்டப்பட்டிருக்கிறது. அதிலிருந்து வெள்ளத்தைத் தேக்கி வாய்க்கால்களுக்கு நீர் பாய்ச்சுகிறார்கள்.



## 2. கோயில்கள்:

கோயில் பண்டையது. கருங்கல் திருப்பணி கொண்டது. சம்பந்த சுவாமிகள் இந்தத் தலத்திற்கு எழுந்தருளியிருந்த போது தன் பிதாவின் தோளின் பேரில் போவதைத் தவிர்த்து நடக்கையில் கால் நோக இறைவன் முத்துச் சிவிகை கொடுத்த இடம் இதுவாகும். இதற்கு அடுத்திருக்கும் மாறன்பாடி என்கிற ஒரு ஊரில் தங்கியிருக்கையில் இவ்வித அற்புதம் நடந்தது. சம்பந்த சுவாமிகள் இது இறைவனுடைய திருவருள் என்று கண்டு ஐந்தெழுத்தை ஓதிச் சிவிகையினை வலம் வந்து அதில் ஏறினார். இந்தச் செய்தி சம்பந்தப் பெருமான் திருப்பதிகத்திலும் அருணகிரிநாதர் திருப்புகழிலும் காணலாம்.

## 3. மூர்த்தங்கள்:

சுவாமியின் பெயர் அரத்துறை நாதர், தேவியின் பெயர் ஆநந்தநாயகி. இதற்கு சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் ஒவ்வொரு பதிகம் பாடியிருக்கிறார்கள். சம்பந்த சுவாமிகளினுடைய “ எந்தை ஈசன் ” என்று தொடங்கும் பதிகம் மிகவும் புகழ் பெற்றது.

## 4. சிறப்புக்கள் :

இந்தத் தலத்தின் தீர்த்தம் நிவாநதியாகும். இதற்கு மற்றொருபெயர் வெள்ளாறு என்பது. இவ் வெள்ளாறு என்பது தான் சோழ நாட்டிற்கு வடக்கெல்லை. இவ்வாற்றின் வடக்கே உள்ள தலங்கள் எல்லாம் நடுநாட்டைச் சேர்ந்தவை. நிவாநதியானது தில்லைச் சிற்றம்பலத்திலும் ஓடுகிற நதியாகும்.

இந் நதியினுடைய இயற்கை அற்புதங்களைச் சம்பந்தர் வெகு நன்றாக வருணித்திருக்கின்றார். தேவாரத்தினால் இவ்வூரின் பெயர் திருநெல்வாயில் என்றும் ; கோயிலின்

பெயர் அரத்துறை என்றும் அறியலாம். சுந்தரருடைய பதிகத்தில் “ நடந்தார், உடுத்தார், நரைத்தார், இறந்தார் ” என்ற அடுக்குச் சொற்கள் வருகின்றன. மேலும் “ மணக் கோலமதே பிணக்கோலமதாய்” என்ற அடுக்குச் சொல்லும் வந்திருக்கின்றது.

இவ்வூருக்கு ஒரு தலபுராணம் உண்டு. கோயிலுக்கு வெளியே முன்புறத்தில் மூவேந்தர் தாபித்த லிங்கங்கள் இருக்கின்றன.

---

சாத்திரப்பகுதி

# சிவப்பிரகாசம் மூலமும் உரையும்

தருமையாதீனப் புலவர், முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்,
தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.)

(மலர். 26; இதழ், 4 ; பக்கம், 163ம் தொடர்ச்சி)

| மதுரைச் சிவப்பிரகாசர் உரை | சிதம்பரநாத முனிவர் உரை |
|---|---|

## 1. குறிப்பிடம்

| | |
|---|---|
| ‘கங்கை குமரி முதலாயுள்ள தீர்த்தங்களையும் காசி திருவம்பலம் முதலாயுள்ள சிவத்தானங்களையும் நாடியிருக்கை ’ | ‘ சமாதிக்கு யோக்கியமாகக் குறிக்கும் புண்ணியத்தலங்கள். |

## 2. காலம்

| | |
|---|---|
| ‘ விஷு, அயநம், சங்கிரமம் முதலாயுள்ள காலங்களிலே செய்யும் கிரமங்கள்! | ‘ இன்ன காலம் இது செய்ய வேண்டும் என்னுங் காலசங்கற்பனை ’. |

## 3. திக்கு

| | |
|---|---|
| ‘ இந்தநாளைக்கு இன்ன திசையிலே போகலாம், இருக்கலாம், இன்ன மந்திரம் இன்ன திசையைப் பார்த்து ஜபிக்கலாம் என்னும் முறைமைகள் ’ | ‘ இன்ன திசை நோக்கி இது செய்ய வேண்டும் என்னுந் திக்குக் கற்பனைகள். ’ |



## 4. ஆசனம்

| | |
|---|---|
| ‘ பதுமாதனம், கூர்மாதனம் முதலாயுள்ள ஆதனங்களிட்டிருக்கை. | ‘ பத்மாசனம் முதலியன அறுபத்து நான்காசனங்களிலும் இன்ன ஆசனத்திலே இருக்க வேண்டும் என்னும் ஆசன நியமம். ’ |

## 5. கோள்கை

| | |
|---|---|
| ‘வாய்மை,ஒப்புரவு, ஈகை முதலியனவாயுள்ள கொள்கைகள்.’ | ‘ ஒரு பிரயோஜனங்களின் கோட்பாடு. ’ |

## 6. குலம்

| | |
|---|---|
| ‘ பிராமணர்கள் முதலாகச் சண்டாளர் ஈறுகிய குலநிதி முதலாயுள்ளவை. ’ | ‘ சாதியபிமானம். ’ |

## 7. குணம்

| | |
|---|---|
| ‘ யாவராயினும் அவரவர் சீலத்தினும் ஒழுகுதல், ஒருவரை நிந்தியாமை, புறங்கூறுமை முதலாயுள்ள குணங்கள். ’ | ‘ சாத்துவிகம் முதலிய குணங்கள். ’ |

## 8. சீர்

| | |
|---|---|
| ‘ அந்தந்தச் சாதி யொழுங்கு குலையாமல் நடக்கை. ’ | ‘ நாமம் வேஷம் ரூபம் முதலிய சிறப்பில் அபிமாநம். ’ |

## 9. சிறப்புறுவிரதம்

| | |
|---|---|
| ‘ கொல்லா விரதம் அஷ்ட விரதம் முதலாயுள்ள விரதங்கள்’ | ‘ சிறப்பினையுடைய சாந்திராயணம் முதலிய விரதங்கள் ’ |

## 10. சீலம

| | |
|---|---|
| ‘ சாதித் தொழில் குலத் தொழில், பொறையுடைமை, அருளுடைமை முதலாயுள்ள சீலங்கள். ’ | நல்லொழுக்கம் |

## 11. தவம்

| | |
|---|---|
| ‘ பஞ்சாக்கினிநடு, ஜலத்தினடு முதலியவற்றிற் செய்யுந் தவங்கள். ’ | ‘ பஞ்[illegible]ல்முதலியு[illegible]. |

[illegible stamp]

## 12. ஜெபம்

| | |
|---|---|
| ‘ தேவதை மந்திரங்கள் சத்தி மந்திரங்கள் எதிரேறு மந்திரம் திருவம்பலவித்தை முதலாயுள்ள ஜபங்கள்.’ | ‘ இருஷி, சந்தசு, தேவதை, பீசம் விநியோகம் என்று இவை உடன்கூட, மானதம், மந்தம், உரையென்னும் மூன்று விதமாக, வசீகரம் முதலியவைகளைக்குறித் துச் செபிக்கும் செபம் ’ |

## 13. தியானம்

| | |
|---|---|
| ஆதாரம் நிராதாரம், பிரா சாதம் முதலாயுள்ள தியா னங்கள். | ‘ சடாதாரங்களிலேஒவ்வோர் ஒளிகளைப் பற்றித் தியானிக்குந் தியானங்கள் |

‘ ஒழிதல் செய்தல் ’ என்றதற்குச் சிதம்பரநாத முனிவர் ‘ விடுதலைச் செய்தல்’ என்றுரைத்தது. குறிக்கத் தக்கது. சிந்தனை யுரையில், குறிப்பு வேறு இடம் வேருகக் கொண்டு பதினைன்காகக் கருதி, ஞானத்துக்கு முன் ஒன்பதும் கிரியைக்குப் பின் ஐந்துமாகப் பகுத்துரைத்தும் உணரற்பாலது.

### முத்தரது ஞான நிகழ்ச்சி

௯௫. ‘ அகம்புறம் என்றி ரண்டால்
அருச்சனை புரியும் இந்தச்
சகந்தனில் இரண்டும் இன்றித்
தமோமய மாகி எல்லாம்
நிகழ்ந்திட மகிழ்ந்து வாழும்
நீர்மையார் போல ஞானம்
திகழ்ந்தகம் புறமௗ ளுத
செம்மையார் நன்மை யாரே. ’

என்பது, வாக்குமனங் கடந்த மெய்ப்பொருளைத் தம் சிற்றறிவால் அகத்தும் புறத்தும் அர்ச்சனை புரிபவருள்ளே, சரியையாளர் புறத்தும், யோகியர் அகத்தும், கிரியையாளர் அவ்விரிடத்தும் பூரண நிலையை இழந்து அற்ப



ஞானக்கிரியை யுடையவராவர். அம்முத்திறத்தவரோடு ஞானியரும் கூடியிருப்பினும், சுட்டறிவின்றிப் பூரண நிலையுடையவராதலின், அந்தரியாகமும் பகிர்யாகமும் இன்றி, பரஞான பூரண விளக்கம் எய்தப் பெற்றவராய், ஏகதேசக் காட்சியிற் பொருந்தாத திருநின்ற செம்மையிஞராகிச் சிவமேயாவர். தாமதகுணம் மேலிட்டவர்க்கு ஞானக்கிரியைகள் ஒரு காரணமும் இன்றி அடங்கும். அவர்கள் ஒருவிதிவிலக்கு இன்றி எவ்வேளை யாது நிகழும்? அவ்வேளை அதுவேயாகிச் சித்தசஞ்சலம் சிறிதுமின்றி வாழ்வார்கள். அவ்வாற்ருன் அவ்வஞ்ஞானிகள் இயல்பு மெய்ஞ்ஞானிகளின் இயல்பிற்கு ஒப்பாகக் காட்டநிற்கின்றது என்பதாம். நன்மை - சிவம்.

‘ தேவரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான் ’

என்ற குறளை இங்குக் கருதுக.

இது சிவாநந்த போகம் துய்க்கும் பரமுத்தரது ஞானத்தின் முறைமை உணர்த்திற்று. இப் பரமுத்திநிலை எய்தினேர், பரமுத்தராவர். இதனினீங்கிய நிலையில் ஜீவன் முத்தராவர். இருவர்க்கும் இதுபேதம் ஆதலறிக.

‘ ஆநந்தக் கூத்தன் அருள்பெறின் நாம் அவ்வணமே
ஆநந்த மாகிநின் ருடாமோ தோணுக்கம்.’

‘ ஆநந்த மேசெவி அம்புயத் தாளிணை அங்கைகளும்
ஆநந்த மேதிருக் கண்ணும் செவ்வாய் அருள்மேனியெல்லாம்
ஆநந்த மேஅருட் சிற்றம் பலவர் அருட்பொருளும்
ஆநந்த மேஅவன் தில்லையும் காழியும் ஆநந்தமே ’

—சிற்றம்பலநாடிகள் - கலித்துறை. 49.

என்பவை சுவாநுபூதிமான்களது சிவாநுபவச் சிறப்பு.

### ஜீவன் முத்தரது யோகம்

(௯௬) அண்டமே விடவ னைத்தும்
அனைத்தையும் அண்டம் மேவிக்
கோண்டல்போல் எவையும் ஞானம்
குறைவிலா நிறைத லாலே

கண்டதோர் பொருளை அந்தக்
கருத்தினாற் காணிற் றானே
அண்டநா யகனார் மேனி
யானதே லைய மின்றே.

என்பது,

அசேதனப் பிரபஞ்சமெல்லாம் அண்டத்தில் அடங்க அண்டமானது அவ்வெல்லாப் பிரபஞ்சத்திலும் நிறைந்திருத்தல் போல, பரைஞானம் எவற்றிற்கும் வியஞ்சகமாய்ப் பிரிவற நிறைந்து நிற்கின்றது. அந்நிறைவை அறிந்த ஞானியர் வாசனாமலத்தால் தம் ஞானக் கிரியைகள் புறத்துச் செல்ல, ஏகதேசக் காட்சி எய்தின், அப்பொழுதே பதார்த்தங்களைப் பாராமல் பரத்தையே தரிசிப்பின், குருவருளால் உணர்ந்து பழகிய சிவாநுபவசாதனையால், சிவபிரானைத் தனக்கு உயிராயும் தன்னைச் சிவபிரானுக்கு அழியாத் திருமேனியாயும் உற்றுநிற்கும் சுத்தாத்துவித நிலையை உடையவராவர் என்றால் ஐயம் இல்லை என்பதாம்.

(சிவஞானபாடியம் சூத்திரம் ௧௧ - அதிகரணம் - ௧ - நோக்குக)

ஐயமில்லை என்னுமிடத்தில், மதுரைச் சிவப்பிரகாசர் 'ஜனனமுண்டாகா தென்கின்றது' என்றும், சிந்தனை யுரையாளர் 'சிவமே கண்டிருக்கப்படுதற்கு' என்றும் 'இலக்கணம் சிதம்பரநாத முனிவர், (ஞானமேசொரூபமாய் நிற்றலாகிய) அங்ஙனமேயாதல்' என்றும் இயைத்துள்ளவற்றை நோக்கின், ஐயமுண்டு என்று புலப்படுகின்றது.

இது சிவயோக நிலையை உணர்த்திற்று.

இங்குச் சிவஞானபாடியத்துள் (சூத்திரம் 12, அதிகரணம், 1) உள்ள ஞான நிலையில் உறைத்து நிற்றலைப் பற்றிய பகுதியை நோக்குதல் நன்று.

*ஜீவன் முத்தரது கிரியை நிகழ்ச்சி*

மண்முதற் கரண மெல்லாம் மறுவசத் தாக்கி ஞானக்
கண்ணினில் ஊன்றி அந்தக் கருத்தினால் எவையும் நோக்கி
எண்ணிஅஞ் செழுத்து மாறி இறைநிறை வுணர்ந்து போற்றல்
புண்ணியன் றனக்கு ஞான பூசையாப் புகலும் அன்றே. ௯௦

என்பது, (1) பிருதிவி முதல் நாதம் முடியவுள்ள தத்துவங்களெல்லாம் மாயேயம். ஆன்மா அல்ல. அவை தொழிற்படுவது ஆன்மாவின் வழித்தன்று. அவற்றை ஆக்கி நிறுத்தி அசைவிப்பது திருவருளே யாகலின், அது பரசிவத்தின் வழித்தேயாம் என்று உள்ளவாறு உணர்ந்து, அத்தத்துவங்களிற்றோயாது நிற்றல் பூதசுத்தி ஆம். (2) சிவஞானத்தை யின்றி ஆன்ம ஞானம் ஜீவியாத முறைமையையும் சிவஞானம் உள்ளும் வெளியும் ஒழிவின்றி நின்று காட்டியுங் கண்டும் உபகரித்து வருதலால், அச்சிவ ஞானத்தையன்றித் தனித்து ஞானமில்லாமையையும் அறிவது தான சுத்தி ஆம். (3) அவ்வாறு பிண்டத்திற் கண்ட முறையே அண்டத்தும் என்று அச்சிவ ஞானத்தால் எல்லாம் செயற்படு முறைமையை அறிவது திரவிய சுத்தி ஆம். (4) பிறவியறுப்பதற் கெண்ணி, அவ்வெண்ணத்தை நீங்காது, விதிப்படி திருவைந் தெழுத்தினைக் கணிப்பது மந்திர சுத்தி ஆம். (5) முதல்வன் ஔபச்சிலேடிக வியாபகமாய், யாண்டும் நிறைந்து நின்று அருளும் பூரண நிலையை அறிந்து, அவனது உபகாரத்தை மறவாத பேரன்பால், அடிமைத் திறம் வழுவாமல், சதாகால பூஜை செய்வது இலிங்க சுத்தி ஆம். இவ்வாறு சதாகால பூஜையாய் அம் முத்தர் பணி முழுதும் ஞானபூஜையாகவே முடியும் என்று ஆகமங்களிற் கூறப்படும் என்பதாம்.

இதற்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய உரை தக்க மேற்கோளுடனிருத்தலின் அதிற் கண்டுணர்தல் சால நன்றாம். (1) மண்முதற் கரணமெல்லாம் மறுவசத்தாக்கல் பூத சுத்தியையும் (2) ஞானக்கண்ணினில் ஊன்றல் ஸ்தாந சுத்தியையும் (3) அந்தக் கருத்தினால் எவையும் நோக்கல் திரவிய சுத்தியையும் (4) அஞ்செழுத்தும் மாறி விதிப்படி எண்ணல் மந்திர சுத்தியையும் (5) இறைநிறைவு உணர்ந்து போற்றல் இலிங்க சுத்தியையும் உணர்த்தி, முத்தரது சதாகால ஞானபூஜையை அறிவித்தது இச்செய்யுள். புகலும் என்னும் பயனிலைக்குச் சிவாகமம் என்பது எழுவாய். அது வருவிக்கப்பட்டது. மதுரைச் சிவப்பிரகாசர் உரையில் ஆன்ம சுத்தியைக் கொண்டு ஸ்தாந சுத்தி கொள்ளப்படாமை அறிக.

புண்ணியன் சிவபூஜையைக் கொள்வோன். புண்ணியம் சிவபூஜை. 'புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு

நீருண்டு' 'புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே' என்பன காண்க.

சிவயோகம் பத்துவகை உண்மைஞானத்துள் ஒன்றும், உண்மை ஞானம் பத்துவகைச் சிவபுண்ணியத்துள் ஒன்றும் ஆதலின், சிவபோகமே புண்ணியம் ஆவதும் அதுவே சிவமாவதும் விளங்க வுணர்ந்தார்க்'கன்றிச் சிவனதுண்மை உணரவாராது. இது குருமுகமாயறிதற்பாலது.

முத்தரது சரியைந் திறம்

தொண்டர்கள் தாழும் வானோர் தொழுந்திரு மேனி தானும்
அண்டருங் கண்டி லாத அண்ணலே என வணங்கி
வெண்டர ளங்கள் சிந்த விழிமொழி குழற மெய்யே
கண்டுகொண் டிருப்பர் ஞானக் கடலமு தருந்தி னோரே.(கூஅ)

என்பது, திருவேடக் குறியுடைய சிவனடியாரையும் திருமால் முதலிய தேவரெல்லாரும் வணங்கியுய்தி பெறும் சிவலிங்கம் பெருமானையுமுரையும் தற்போதத்தால் தேவர்களுக்குங் காண்டற்கரிய முழுமுதல்வனது சுயந் திருமேனியே எனக் கண்டிறைஞ்சி, கண்கள் வெண்முத்துப் போலும் ஆநந்தபாஷ்பத்தைப் பொழியவும் நாத் தழுதழுப்பவும்,முதல்வன் எங்கணும் பாலின்கண் நெய்போலப் பிரகாசித்திருக்கும் முறைமையை உணர்ந்து கொண்டே யிருப்பர் ; ஞானமாகிய கடலுள் ஞேயமாகிய ஆநந்தாமிர்தத்தைப் புசித்திருக்குஞ் சீவன் முத்தர்கள் என்பதாம்.

இதற்கும் மதுரைச் சிவப்பிரகாசர் உரை விரிவாயுளது கற்றுணர்க.

'மாலற நேய மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்ற முதனூற்பகுதியும் 'ஈசன் நேசர்...திருவேடம் ஆலயங்களெல்லாம் அரன் எனவே தொழுதிறைஞ்சி ஆடிப்பாடி...இறுமாப் பெய்தித் திரிந்திடுவர்' என்ற வழிநூற்பகுதியும் இதனோடு பொருத்தியுணரத் தக்கன. "அறிவரியான் தனை யாக்கை ஆக்கி அங்கங்கே உயிர்க்குயிராய் அறிவு கொடுத்து அருளால் செறிதல், சிவோகம்பாவித்தல், குறியதனால் இதயத்தே அரனைக் கூடுங் கொள்கை, குறியொடுதாம் அழியும் நெறி" என்னும் நால்வேறு ஏதுக்கள் வழிநூல் உணர்த்துவதும் ஈண்டுக் கருதற்பாலது.



திருவேடத்தினது இயல்பு "தூய வெண்ணீறு......... உடையார் புகுந்தனர் வீதியுள்ளே" 'சிந்தை யிடையறா அன்பும்......எதிர்வந்தணைய' 'கண்ட கவுணியக்கன்றும்... திருவேடம் நேரே தோன்றிய தென்று தொழுதே' என்னும் பெரியபுராணத் திருவிருத் தங்களாலுணரப் பெறும்.

திருவேடம் மெய்யுணர்வுடையாரைக் காட்சி மாத்திரை யானே வசீகரம் ஆக்கி இன்பஞ் செய்வது,

" சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணார் இளங் கொங்கையிற் செங்குங்குமம் போலும் பொடியணிமார்பிலங்கும் என்று புண்ணியர் போற்று இசைப்ப " என்னுந் திருப்பல்லாண்டு வசனத்தால் அறியப்படும்.

இந்நூற் பொருட் சிறப்பு

நிலவுல காய தாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்
குலவினர் அளவ ளாவாக் கொள்கைய தாகி வேதத்
தலைதரு பொருளாய் இன்பாய்த் தாவில்சற் காரி யத்தாய்
மலைவறும் உணர்வாற் பேத்த முத்திகள் மதித்தாம் அன்றே.

என்பது, நிலவுகின்ற உலகாயதம் முதல் சிவாத்துவிதம் முடியவுள்ள சமயங்களில் நின்றவர் அளவெல்லாம் எட்டமாட்டாதனவா யொழியும்படி தானே தலைமையதான கொள்கையினை யுடையதாகியும் நான்மறை முடிவின் பொருளாகியும் பேரின்பமாகியும் கேடில்லாத சற்காரிய வாதமாகியும் மயக்கவிகற்பங்களை யறுத்துச் சித்தவிகாரக் கலக்கந் தெளிவிக்கும் வித்தகத்தால், பொதுவியல்பாகிய பெத்தமும் சிறப்பியல்பாகிய உண்மையும் (சிவாகமத்தினுணர்ந்தவாறே) ஆராய்ந்து உணர்த்தினேம் என்பதாம்.

குலவினர் - கொண்டாடுவோர். அளவு - அவ்வச்சமய முடிவு. அளாவுதல் - பொருந்துதல்.

முன் 'புறச் சமயத்தவர்க் கருளாய்' எனத் தொடங்கும் திருவிருத்தத்துள் உணர்த்தியதற்கு முரணுகாதவாறு ஈண்

டும் புறம் அகம் ஆகிய சமயங்கட் கெல்லாம் அதீதவுண்மை யாயுள்ள 'சைவசித்தாந்தத் திறன்' இந்நூலாலுணர்த் தப்பட்டதென்றமை காண்க.

'சிவப்பிரகாசச் செழுந்தமிழுண்மைைய அருளுடன் ஆய்ந்து கொள்ளத் திருவருள் வினவல் (கேள்வி, ஆராய்ச்சி) திருந்திடும்' என்று சங்கற்ப நிராகரண முடிவிலுள்ளது முணர்க. திருவருளால் மதித்தாம் என்றது நம் ஆசாரியர் பலரும் அருணெறியிலருணடை யுடையா ரென்பதையும் ஏனையோர் மலநெறியின் மலநடையுடையா ரென்பதையும் குறித்து நின்றது.

சிவஞானபாடியத்துள் விரிவாயுள்ள சமய பேதங்களை உணர்தல் நன்று. மேலும் அப்பாடியத்துள், 'பெத்த முத்திகள்' என்பவற்றின் பொருளும் இதிற் சுத்த சைவம் விலக்கப்படாமையும் காரணத்தொடு விளக்கியிருத்தலறிக.

திருவருள் கொடுத்து மற்றிச்
சிவப்பிர காச நன்னூல்
விரிவது தெளியு மாற்றால்
விளம்பிய ஏது நோக்கிப்
பெருகிய உவமை நான்கின்
பெற்றியின் நிறுவிப் பின்முன்
தருமலை வொழியக் கொள்வோன்
றன்வயிற் சாற்ற லாமே. ௧00

என்பது, சரியை கிரியை யோகம் அனுட்டித்து, இருவினைச் செயல்கள் ஒப்பில் ஈசன்றன் சத்தி தோயக் குருவருள் பெற்றுள்ளவர்களுக்கு ஞானதீக்ஷையைச் செய்து, இச் சிவப்பிரகாசம் என்னும் பெயர் கொண்ட சிவசாத்திரத்தின் விரிவானது தெளிவுறும் வழியால், அளவை நூலுள் உரைத்த இயல்பு காரியம் அநுபலத்தி என்னும் மூன்று ஏதுவினாலும் ஆராய்ந்து, அளவறப் பரவிய உவமத்தோற் றத்தின் வகையாகிய வினை, பயன், மெய், உரு என்னும் நான்கின் தன்மையால் நிறுத்தி, முன்னுக்குப் பின் உண் டாகா நிற்கும் முரண்பா டொழியத் தெளிந்துகொள்ளும்



ஆற்றலும் அறிவுங் காதலும் உடைய வைநயிகனிடத்தில் ஆசாரியர்கள் உபதேசித் தருளலாம் என்பதாம்.

தன்வயின் என்றது, மதுரைச் சிவப்பிரகாசருரைப் பதிப்பு முதலியவற்றில் 'தன்மையின்' என்று காணப் படுகின்றது. அது நூலுரை போதகாசிரியர் மூவரும் உடன் படாதது என்று எளிதில் விளங்குகின்றது.

நன்னூல் :—நன்மை - சிவம். நூல் - சாத்திரம். நன் னூல் - சிவசாத்திரம்.

சிவஞான சித்தியார் சுபக்கம் அளவையுள் மூன்றே துக்களையும் எளிதினறியலாம்.

'வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்'

என்னுந் தொல்காப்பியச் சூத்திரம் ஈண்டுக் கருதற்பாலது. இந்நூலி லுணர்த்தியவாறு,

'உற்ற சரியை ஒழியாத நற்கிரியை
குற்றமிலா யோகக் குறிநெறியும்—முற்றிப்
பிறந்தார்கள் தாம் அறியப் பேசுகேன். அன்றிப்
பிறந்தார் அறியாத பேறு'

என்று துகளறு போதத்தும் ஞானசாத்திர போதத்துக்குத் தகுதியுடையாரை உணர்த்தியது உணர்க.

கொற்றவன் குடியா னேனும் குடியுளான் அடியே னுள்ளுங்
கற்றவ னல்லே னேனுங் கழன்றிலேன் அவன்பூந் தாளை
உற்றவன் சிவனை யானும் உமாபதி சிவனைப் போற்றிப்
பெற்றவன் வீடன் றாலும் பிறப்பினும் பயன்கண் டேனே.

சிவப்பிரகாசம் மூலமும் உரையும் முற்றும்.

---

# இயற்கையின் ஒரு காட்சி

(வித்துவான் - S. அருணாசலம்)

வேனிற்காலம் வந்தது. ஆனால் வெய்யிலின் கொடுமை இன்னம் மிகுதியாகப் பெருகவில்லை. மழைக்காலத்தில் முன்னர் நீர் நிறைந்திருந்த ஒரு பொய்கையில் இப்பொழுது தான் சிறிது நீர் வற்றத்தொடங்கி இருக்கிறது. அங்கே நீர்ப்பூக்கள் நிரம்பி அழகிய காட்சியைத்தந்து கொண்டிருக்கின்றன. அளவற்ற தாமரைப் பூக்கள் வருகின்றவர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்பது போன்ற இனிய தோற்றத்துடன் விளங்குகின்றன.

> " வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
> உள்ளத்தனைய துயர்வு "

என்ற தமிழ்மறையின் கருத்துப்படி உயர்ந்து செழித்து வளர்ந்துள்ள தாமரை மலர்கள் நீர் சிறிது குறைந்தபடியால் காண்கின்றன. அவைகள் நீர் மட்டத்திற்கும் வந்து விடுகின்றன. என்றாலும் தாமரை இலைகள் மட்டும் முன்னிருந்த உயரத்திலேயே, நீண்ட தண்டுகள் நீருக்கு மேலே தோன்றும்படி நிமிர்ந்து நிற்கின்றன. வட்ட வடிவமான அவ்விலைகள் பார்ப்பதற்குப் பச்சை நிறமான பல சிறிய குடைகள் விரிந்து ஏற்பதுபோலக் காட்சியளிக்கின்றன.

மேலும் குளத்தைச் சுற்றிலும் வளம் நிறைந்த கழனிகள் சூழ்ந்திருக்கின்றன. அவைகளில் நெற்பயிர்கள் செழித்தோங்கி வளர்ந்து இருக்கின்றன. முற்றிய கதிர் மணிகளின் பளுவைத் தாங்க முடியாமல் அவைகள் வளைந்து தொங்குகின்றன. அந்தக் காட்சியானது வெண்சாமரைகள் வீசுகின்ற தோற்றத்தைக் காட்டுகின்றன. நீர்க்கரை ஓரமாக உள்ள அக்கதிர்கள் குளத்தை நோக்கி வளைந்து தொங்குகின்ற அழகு பார்ப்பவர் நெஞ்சை மகிழ்விக்கின்றது.



இத்தகைய வளம் நிறைந்த பொய்கையில் அன்னப் பறவைகள் மகிழ்ச்சியுடன் அங்கு மிங்கும் நீந்திச் செல்கின்றன. ஓர் இள்மை அன்னம் ஓர் அழகிய செந்தாமரை மலரின்மேல் ஏறிக்கொண்டு பெருமையுடன் அமர்ந்திருக்கின்றது. என்ன அருமையான காட்சி! இவ்வழகிய காட்சியைத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவீழிமிழலையில் காண்கின்றார்.

ஓர் இளவரசி விலையுயர்ந்த இருக்கையில் வெண்கொற்றக்கொடியின் கீழ் அமர இருபுறங்களிலும் சேடிமார் வெண்சாமரைகள் வீச இனிது வீற்றிருப்பது போல அவ்விள அன்னத்தைக் கண்டு மகிழ்ந்து அவர் பாடுகின்றார். இக்கருத்தை முற்றும் அடியில் கண்ட தேவார அடிகளில் படித்து மகிழ்ச்சி கொள்ளலாம்.

> " செறியிதழ்த் தாமரைத் தவிசில் திகழ்ந்தோங்
> கிலைக்குடைக் கீழ்ச் செய்யார் செந்நெல்
> வெறிகதிர்ச் சாமரை யிரட்ட இளவன்னம்
> வீற்றிருக்கும் மிழலையாமே."

இதில் அன்னமே இளவரசியாகவும் தாமரை இருக்கையாகவும் உயர்ந்து நிற்கும் இலையே வெண்கொற்றக் கொடியாகவும் பைஞ்சாலித் தொங்கல்களே சாமரைகளாகவும் சுவாமிகள் காண்பது இயற்கையில் தோய்ந்த கவிப் பான்மையை விளக்குகின்றன. இப்படிப்பட்ட அரிய காட்சிகள் பல சம்பந்தர் அருளிச்செய்த கவிதா உலகில் காணலாம்.

---

# திருமந்திரமும் உலகியல் செய்திகளும்

(ம. ரா.)

பொதுவாக நூலாசிரியர்கள் தாங்கள் எடுத்துக் கொண்ட கருத்துக்களை வற்புறுத்திக் கூறுவதற்கும், தெளிவுபடக் கூறுவதற்கும், உலகியல் செய்திகளை உவமைகளாக இணைத்துக் கூறுவது வழக்கம்; தமிழ் மொழியில் இவ்வகையான வழக்கம் மிகுதியும் உண்டு. சைவத்திருமுறைகளிலே உலகீய உவமைகள் கணக்கின்றி வந்துள்

ளன. அத்திருமுறைகளிலும் திருமந்திரத்தில் அத்தகைய எடுத்துக்காட்டுகள் நிரம்ப வந்துள்ளன. தமிழ் மூவாயிரம் பாடல்களில் எந்தப் பகுதியைப் பார்த்தாலும் உலகச் செய்திகள் எடுத்தாளப்பட்டுள்ளன : அவற்றுள் 9-ஆம் தந்திரத்தில் 'மறைபொருள் கூற்று' என்ற பகுதியில் ஒவ்வொரு செய்யுளிலும் ஒவ்வொரு உலகியல் செய்தி கூறப்பட்டுள்ளது. அக்கூற்றில் 70 செய்யுட்கள் இருக்கின்றன. அவைகளில் அறிவுக்கு எட்டாத தத்துவங்களை உலகப்பொருள்களைக் கொண்டு புதிர்கள் போல விளக்குகின்றன. புதிர்கள் வெளித்தோற்றத்திற்கு ஒரு கருத்தும், உள்தோற்றத்திற்கு வேறொரு கருத்தும் கொண்டிருப்பன. சிற்றறிவுடையவன் ஒரு செய்யுளைப் படித்துப் பார்த்தால் அதன் பொருள் தலை, கால் தெரியாததாயிருக்கும். பேரறிவுடையவன் அதனைப் படித்தால் உண்மையான பொருளை அறிவான். ஒரு புதிருக்குச் சாதாரண உதாரணம் ஒன்று கொடுப்போம்.

நந்தவனத்தில் ஒரு ஆண்டி — அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டுவந்தான் ஒரு தோண்டி — மெத்தக்
கூத்தாடி, கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி.

இந்தப் பாட்டில் வெளிப்படையாகத் தோன்றும் பொருள் என்னவென்றால், ஒரு நந்தவனத்தில் வசித்துக் கொண்டிருந்த ஒரு ஆண்டி ஒரு குயவனிடத்தில் சென்று அவனை வேண்டிக்கொண்டு ஒரு தோண்டியைப் பெற்றுக் கொண்டு வந்து அதனால் களிப்படைந்து குதிக்கையில் அத்தோண்டி உடைந்துவிட்டது என்பதாகும். இதற்கு உள்பொருள் கூறுகையில், ஆண்டி என்பது ஆன்மா, தோண்டி என்பது உடல், நாலாறு மாதம் வேண்டினது என்பது 10 மாதம் கருப்பையில் இருந்தது, குயவன் படைப்புக் கடவுள், கூத்தாடுதல் உலக வாழ்க்கையில் ஈடுபட்டு ஆடுதல், தோண்டியை உடைத்தல், உடலைச் சாகவிடுதல் என்பதாம். அதாவது ஒரு ஆன்மா கடவுளிடம் வேண்டிக் கொண்டு பத்துமாதம் கர்ப்பத்திலிருந்து ஓர் உடலைப் பெற்றுக்கொண்டு கண்டபடி உலக வாழ்க்கையில் களித்துவிட்டு உடலைச் சாக்காட்டிற்கு விடுவது என்பது பொருள். இவ்விதமாகப் புதிர்ப் பாடல்கள் 70 கொண்டது திருமந்திரத்தில் மறைபொருள் கூற்று என்ற பகுதியாகும். அப்பாடல்கள் மேலே கூறிய சித்தர் பாடல்போல எளிதான பாடல் அல்ல. உட்பொருள் விளக்கினாலன்றி எளிதில் பொருள் கொள்ளுவது கடினம். ஓர் உதாரணம் கூறுவோம் :



'வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண் டோடினார் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே' (2829)

இச்செய்யுளை மேலாகப் படித்தால் முரண் ஆகப் பொருள் தோன்றும்.

இவ்விதமான வேடிக்கைப் பாடலை விகடகவி என்று கூறுவதுண்டு. வழுதலை (கத்திரிக்காய்) விதைத்தால் பாகற்காய் முளைக்குமா? புழுதியைத் தோண்டினால் பூசணிக்காய் முளைக்குமா? இதனைக் கண்ட தோட்டத்துக் குடிகள் வணங்கிக்கொண்டே ஓடிவிடுவார்களா? அப்படிப் பட்ட தோட்டம் முழுவதும் வாழைப்பழங்களாய்ப் பழுக்குமா? இப்பாட்டிற்கு இப்படிப்பட்ட பொருள் இருக்கக் கூடுமா என்று வெளிப்படையாகப் படிப்போர்கள் கேட்பார்கள். அதன் மறைபொருளை இனி விளக்குவோம் :—

---

மேலே கூறிய விகட கவிக்கு ஒரு உதாரணம் கூறுவோம் :

"வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமப்பார் இச்சரக்கை — மங்காத
சீரகம் தந்தீரேல் வேண்டேன் பெருங்காயம்
எரகத்துச் செட்டி யாரே."

இச்செய்யுளிலுள்ள பொருள் விபரீதமாக இருக்கிறதில்லையா? உண்மைப் பொருள் அடியில் கண்டவாறு : வெங்காயம் – வெம்மையான உடல். சுக்கானால் – எரித்தால், வெந்தயம் – வேகும் இதயம், சரக்கு – உடல், சிரகம் – மேலுலகம், பெருங்காயம் – பெரிய உடல். எரகம் – திருஎரகம், செட்டி – முருகக்கடவுள். இப்போது பொருள் விளங்குகிறதல்லவா?

முதலிய கேடுகள். மனிதனுடைய தூய்மையான வாழ்க்கையிலே காமாதி அறுவகை கெட்ட குணங்கள் முளைத்துக் கெடுத்துவிட்டன என்பது உள்ளுறை. இப்படியே ஒவ்வொரு பாடலையும் விளக்கிக்கொண்டு போகலாம். அந்த முறை மிகவும் பெருகும். ஆதலால், பேர்களை மாத்திரம் இனிக் கூறுவோம்.

2. பனை (பா. 3). "ஆறுதெருச் சந்தியில் நான்குபனை உள, ஏணியிட்டுப் பனையேற ஏழுகடல் கண்டேன்"—இது எழுவகைப் பிறப்பு.

3. விளையும் செய் (பா. 5). ஐந்து வித்தில் ஆனை விளைக்கும் செய் ஒன்று உண்டு. இதில் திருவருட் சத்தி கூறப்பட்டுள்ளது.

4. செய்வகைகள் (பா. 6). "பள்ளச்செய், பாழ்ச்செய், கள்ளச்செய், உள்ளச்செய், வெள்ளச்செய்"—இச் செய்யுள் சிவானந்தம் விளைவது.

5. நிலவகைகள் (பா. 7). முக்காணி களர்—உழுதல் என்பன. இதில் யோக விவரங்கள் கண்டுள்ளன. இதில் அணைகோலுதல் கண்டிருக்கின்றது.

6. பாய்ச்சல் (பா. 8). "ஏற்றம் இரண்டு, துரவு ஏழு, மூத்தான் இறக்க, இளையான் படுப்பது – பாத்தி பாயாது பாழில் பாயும்"—இதிலே யோகநிலை கூறப்பட்டுள்ளது.

7. நாற்றங்கால் கழனியில், கறவையைப் பூட்டி உழ வெள்ளரி விளையும் (சுவாசப் பயிற்சியில் சுக்கிலம் முத்திக்கு வித்தாகும்.)

8. எருவிட்டு விதை தூவி கிடா பூட்டிக் கிளரின் சோறு உண்ணும் செந்நெல் அறுக்கலாம். (பயிற்சியில் சிவானுபவம் பெறுதல்.)

இனி உழவுச் செயல்களை மட்டும் குறிப்போம்.

முக்காதம் விளைவது (14), களர் உழுதலில் பயனில்லை (15), நாவல் கனி (21), கொல்லையில் சமன்கட்டிப் பருத்தி நிறுத்துதல் (25), இலையில்லை; பூவுண்டு, தலையில்லை, வேருண்டு, குலையில்லை, கொய்யும் 'மலருண்டு' (33),



கொட்டியும் ஆம்பலும் பூத்தகுளத்திடை எட்டி வேம்பு வாழை, கட்டி, தேன் உண்ணமாட்டார், எட்டிப்பழத்திற்கு இளைக்கின்றது - (36), தட்டத்து நீரில் தாமரை பூத்தல் கொட்டத்திலிட்ட கொம்மட்டியாம் (38), உழுது வித்தின காலத்து மழை பெய்யாவிடில் நிலம்பயவாது (47), மூன்று காதவழியிலே மூன்றுவாழைகள் மலம் காய்த்தன. கண்ணியர் நக்கு உண்டார் (50) ; மொட்டு மலர்தல் (53) ; நீரின்றிப் பாயும் நிலத்துப் பச்சை அறிய முடியாது (54), வாழைக்குச் சூரைவலிது, இரண்டையும் துண்டித்தால், வாழை வாழும் (56), தோட்டத்தில் மாம்பழம் விழுந்தால் நாட்டு நரி ஊளையிடின் என்ன பயன் (67), இந்த உழவு செய்கைகளுக்கு தத்துவார்த்தங்கள் உண்டு. அவைகளைக் கண்டு கொள்க.

உயிர்வகைகள் :

பற்பல உயிர்வகைகளும் உதாரணங்களாக எடுத்து ஆளப்பட்டன. அவைகள் 26 பாடல்களில் வருகின்றன. அவைகளின் பெயர் மாத்திரம் குறிப்போம். பட்டிப்பசுக்கள் (24), குட்டிப்பசுக்கள் 7–ம், 5–ம் (9), ஈற்றுப்பசுக்கள் 24, ஊற்றுப் பசுக்கள் ஒரு குடம்பால் கறக்கும் (10), குறுநரிக்கொட்டகத்து பாபத்தை அங்கியுள் ஆயிழை வகித்தாள் (16), பார்ப்பான் அகத்தில் 5 பசு உண்டு, மேய்ப்பார் உண்டாயின் பால் சொரியும் (18), ஆமாக்கள் 5, அறியேறு 30, (19), மலராத பூவில் வனத்தின் மதுவைப் பிறவாது வண்டு உண்டது (20), பரும்புலி 10, யானை–15, வித்தகர்–5, விநோதகர்–16, மருத்துவர் அறுவர் (23), இரண்டு கடாவுக்கு ஒரு தொழும்பன், ஒருத்தி பிடிக்கில் 2–ம் ஒரு கடாவாம் (24), கூகை, பாம்பு, கிளி, பூனை, நாகை, பூழ், உரையும் கூகையைக் கண்டு எது கூப்பிடும்—(26), வெள்ளரி மூன்று கொலைக்குப் பிறந்தவை—(27), குதிரை ஐந்து, ஒட்டகம்–6, (28), பருந்தும் கிளியும், பறை கொட்ட மணம் நடந்தது (31), பறவை இரை கொத்துதல், பெடைவண்டு இன்புற ஆண்வண்டு உண்ணல் (37), ஐந்தகத்தில் ஆறு பறவை, நுனிக்கொம்பில் நூறு பறவை (39), கூப்பப் பறவைகள், (42) கயல் கண்டார், முயல் கண்டார், (44), பன்றி, பாம்பு, பசு, முசு, வாரணம், சிறு நரி கூட்டத்துக்

கூடியது, கூகைகுருந்து ஏரின் நாகம் உரை செய்யும் (55), குறவன் புணர்ந்த கொழுமீன் (57), கொடை விட்டுப் போந்தது கோயில் எருமை (59,) நாகம் எட்டு, புரவி நாலு, பன்றியுமாம், (60), குளத்திடை குருகு இரைதேர்ந்து உண்ணல் (61), பூவில் வண்டு (62), புலர்ந்தது போதென்று புட்கள் சிலம்பும் (68), பறவைகள் இரண்டாகி, வெறிக்கின்றன (69), மேலே-26. பாடல்களில் கூறப்பட்ட உயிர் வகைகள் நமது நாட்டு விலங்குகள், பறவைகள், மீன்கள், பூச்சிகள் எல்லாம் காண்கின்றோம்.

உயிர்வகைகளில் கோழிப்புள், (8), மான்கன்று (17), குரங்கு (19), நாரை (45) முதலியவைகள் வருகின்றன.

## இயற்கைப் பொருள்கள்

இயற்கைப் பொருள்களை உதாரணங்களாக 6 பாடல்கள் கூறுகின்றன. மலைமேல் மழைபெய்வது, கொலைமேல் கொழுங்கனி வீழ்தல் (17), அக்கரை தோன்றும் மலை (30), குளிக்கின்ற கூவலுள் பூமிவந்து ஊறிடும் (40), வளைகடல் ஏழு, குலவரை - 8, விசும்பு, அங்கி, மழை, வளி, நிலம், ஆலயம் ஆகும் (41), ஒதுங்கிய தண்கடல் ஓதம் உலவல் (48).

## மரவகைகள்

4. செய்யுட்களில் காண்கிறோம். மூங்கில் முளையில் வேம்பு, வேம்பில் கிடந்தது பனை (22), அக்கரை நின்றது ஆலமரம் (34), அடியும் முடியும் அமர்ந்தது ஆத்தி முடியும் நுனியில் முத்தலை மூங்கில் (51), பொன்னிறங் கொண்டது புன்னை (65).

## வாணிபம்

தொழில்களில் வாணிபம் சிறந்தது. அதில் நிலவாணிபமும், கடல் வாணிபமும் உண்டு. அவைகளைக் காண்க. தோணியேறிக் கடல்புக்கு வாணிபம் செய்து வழங்குவன் மலர்மகன் (49), கொங்கு புக்காரொடு வாணிபம் செய்தது (64), குடிகள் தம்மிலே காழுற்று அகத்தி இருவர் கடை பெறும் (66), தோணி ஒன்று உண்டு, துறையில் விடுவது, ஆணி மிதித்து ஐவர்கோல் ஊன்றுவர். வாணிபம் செய்வார் ஆற்று இடையில் ஆணிகலங்கில் அதோகதி ஆகும். வணிகனுடைய தராசு 52-ல் கூறப்பட்டுள்ளது.



## விளையாட்டுப் பொருள்கள்

இவை இரண்டு பாடல்களில் காண்கிறோம். வாழ்க்கையைக் கவறுடுதலுக்கு (சூதாடுதல்) ஒப்பிடுதல் வழக்கு. காயம், பலகை, கவறு ஐந்து, கண் மூன்று, ஆயம் பெறுவது ஐம்பத்தொரு அக்கரம் (1), இசைக் கருவி இரண்டாவது அதில் வீணை சிறந்தது. வீணையும், தண்டும் விரவி இசை முரல் (63).

## தொழில் செய் வகுப்புக்கள்

இரண்டு பாடல்கள் வருகின்றன. தட்டானைப் பற்றிக் கூறுவது அவ்விரண்டும் : (11), (58), அவைகளில் இரண்டாவது பாடல் குசவரையும் காவிதியார்களையும் கூறுகின்றன.
தோட்டக் குடிகளைப்பற்றி 4-ம் பாடலிலும், மருத்துவரைப்பற்றி 23-ம் பாடலிலும், மந்திரியைப் பற்றி 59-ம் பாடலிலும், கூறியிருக்கக் காண்கிறோம்.

## நகை அணிகள்

மங்கையர் அணியும் நகைகள் சில கூறப்பட்டுள்ளன. 29-வது பாடலில் காறை, நாண், வளையல் குறிக்கப்பட்டுள்ளன.

## சில்லரை வழக்கங்கள்

மக்கள் துணி உடுத்திக் கொள்ளுதல் (கூறை) சோறு உண்ணுதல், மூங்கிற்குழாயிற் எண்ணெயை நிரப்பிக்கொள்ளுதல் முதலியவைகள் 29-ம் பாடலில் குறிக்கப்பட்டுள்ளன. அதிலேயே பாறையில் காயப்போட்ட சீலை பறக்கின்ற செய்தியைக் கூறுகின்றார். 35-ம் பாடலில் கள்ளர் கூறை கொள்வது கூறப்பட்டுள்ளது. கொட்டு, தாலி, பறை, இவை 43-ல் கூறப்பட்டுள்ளன. கொல்லை

3 காதம், காடு அரைக்காதம் எல்லை மயங்கிக் கிடந்தது. இரண்டு நெறி எல்லை மயங்காதவர் கொல்லை கடந்து சென்று ஊர்புகலாம் (46), மச்சுவீட்டைப் பற்றி 11-ம் பாடலிலும், ஏட்டுப்புத்தகத்தைப் பற்றி 20 ம் பாடலிலும், கயிற்றைப் பற்றி, 35, 40, பாடல்களிலும் படிக்கின்றோம். இவை முதலான பழக்கவழக்கங்கள் அங்கங்கே எடுத்தாளப்பட்டுள்ளன.

---

# “ வேண்டுதல் - வேண்டாமை ”

(திருவண்ணாமலை - அ. தா. ப. திருஞானசம்பந்தம்)

## வேண்டுதல் :

“ வேண்டத்தக்க தறிவோய் நீ, வேண்ட முழுதும் தருவோய் நீ ” என்பது மாணிக்கவாசக அடிகளாரின் மணி வாக்கு. “ வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய் ” என்பது நாவரசரின் நலந்திகழ் வாக்கு. “வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட ” என்பது முருகாற்றுப் படையில் நக்கீரரின் நலனுடை வாக்கு. “பிறப்பறியாப் பல பிச்சைசெய் மாந்தர் சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர் ” என்பது சொல்லுக்கு உறுதி தரும் அப்பரின் வாக்கே ! மேற்கண்ட மூதாளர்களின் திருவாக்குகள் நமக்கு அறிவிப்பதென்ன ? வேண்டுதல் மனத்திண்மையுடன் எங்கு நிகழ்கிறதோ, அவ்விடத்திற்கு வேண்டிய பொருள் தடையிலாது கிட்டும் என்பதையே மூதாளர்கள் வாக்கு விளக்குகிறது என்க. வேண்டுங்கால் மனத்திண்மை வேண்டுமா ? சந்தேகமில்லாமல் வேண்டும். தெய்வப்புலவர் வள்ளுவரிடம் செல்வோம் வாருங்கள். அவர் என்ன கூறுகிறார் என்பதைக் காண்போம்.

“ எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியார்
திண்ணியராகப் பெறின் ” (குறள் 6. அதி. 67)



(கருத்து) எண்ணியவர் - எண்ணியபடியே செயல் ஆற்றுவதில் - உறுதியுடையவராகப் பெற்றால் அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர்.

ஆறறிவு படைத்த மனிதனும் இன்ப இறைவனை நோக்கி வேண்டும்பொழுதுதான், இறைவன் அதற்கு செவி சாய்க்கின்றான். உள்ளத்து உருகி, அவன் பாதத்தை நினைந்து, நைந்து அவனை வேண்டுவோர்க்குத், தடங்கருணைப் பெருங்கடலாகிய பெருமான் வரையாது, அன்பர்கள் வேண்டியதை ஈகின்றான் என்பது முற்றாய்ந்த பெரியோர்கள் கண்ட முடிபு. வேண்டுதல், அவ்வவர் அறிவின் திட்பத்திற்கும், மனப்பாங்கிற்கும், பழகும் சூழ்நிலைக்கும் ஏற்றாற் போல் நிலவி நிற்கும். எல்லோரிடத்திலும் ஒரே முறையான வேண்டுதல் நிகழவேண்டும் என்பதை என்றும் எதிர்பார்க்க முடியாது. அவ்வவர்களுக்கு வாழ்வில் எது நிறைவின்றியுளதோ, அதுபற்றியே வேண்டி நிற்பர்.

பளிங்கு உள்ளம் படைத்த மாணவனைப் பாருங்கள் ! அவனும்தான் எழுதியுள்ள தேர்வில் வெற்றிபெற வேண்டும் என்று இறைவனை நோக்கி வேண்டுதல் நிகழ்த்துகிறான். தொழில் துறையாளனை நோக்குங்கள் ! அவனும் தான் வாங்கி வைத்துள்ள பொருள்களின் விலை உயர்ந்து மிகுதியான இலாபம் கிடைக்கவேண்டும் என்று பண்ணவனாய் விளங்கும் பரமனை வழுத்துகின்றான். கொலையாளியை நினையுங்கள் ! அவனும் தான் செய்தது தவறு என்று உணர்ந்தாலும், தண்டனைக்கு உட்படாது விலகவேண்டும் என்று இறைவனை நோக்கி மன்றாடுகிறான். தவமறையோர்களோ, வாழும் பிறவியில் உன்னை இடையறாது நினைந்து, உருகிப்பாடி, உனதருளைப் பெற இம் மட நெஞ்சத்திற்கு அருள்பாலிப்பாய் அப்பனே ! என்று இறைவனை வேண்டுகின்றனர். மேற்கண்ட அனைத்தும் நடைமுறையிற் காணும் காட்சிகளாகவே அமைகின்றன. ஒருவருக்கு அமுதாய் இருப்பது மற்றவர்க்கு நஞ்சாய் இருத்தலும் உண்டு. (One man’s food is another mans’ poison) என்பது ஆங்கிலப் பழமொழி. ஒருவனுக்கு ஒன்று வேண்டின், அது மற்றொருவனுக்கு வேண்டாமலே இருப்பதுண்டு. அதனால் தங்களுக்கு உகந்தது என்ன எனக் கண்டு வேண்டுதலே உலக இயற்கையாய் அமைந்துவிட்டது.

வேண்டுதல் என்பதுதான் என்ன? படைத்த அண்ணலை நோக்கி, அவன் அருளை நம்பால் நல்குமாறு கெஞ்சிக் கேட்டல் என்பதே பொருத்தமுடைத்து. அங்ஙனம் கேட்குங்கால், அவ்வண்ணல் தடையின்றிக் கேட்டதை அளிக்கின்றான் என்பதே ஞானப் பெரியோர்கள் கண்ட உண்மை. வாதவூரடிகளாரை நோக்குங்கள்! அவர் என்ன புகட்டுகிறார்? இறைவனை நோக்கி, நைந்து, உருகி, வழுத்தி, அழுகை பிறக்கச் செய்தால், அண்ணல் அதற்கிரங்கிக் குற்றத்தைப் போக்கி அருளுவார் எனப் புகட்டுகிறார் அடிகள்.

*“யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும் பொய்*
*ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே”*

—திருவாசகம்

அதனால் முறையிடுங்கால் உள்ளத்தில் உள்ளதைக் கரவாது கூறி நிறைவெய்த வேண்டும் உலகமக்கள் என்பது குறித்தே தங்களின் விழுமிய கருத்துக்களைப் பெரியரானோர் குன்றின்மேலிட்ட விளக்கென அமைத்துச் சென்றனர். இடையறாது வேண்டுவது என்பதும் எளிய செயலல்ல! அவன் அருள் பெறுவோர்க்கும் பெற்றார்க்குமே அது சாலும். “அவன் அருளாலே அவன் தாள் வணங்கி” என்ற மொழிக்கிணங்க, முறையிட்டு வழுத்தும் பொழுது, அவன் அருள் முன்னின்று சுரந்து வேண்டியார்க்கு வேண்டியவாறு பயனளிக்கிறது. வேண்டுங்கால், வேண்டும் ஒருவரை, எவ்வளவோ துன்ப அலைகள் வந்து மோதி, வேதனைக்குள்ளாக்கும். அத்தகு சோதனைகளை யெல்லாம் எதிர்த்து நிற்குங் காலத்தே, வாழ்வு செம்மை யுறுகிறது. எடுத்துக்காட்டாகப் பெரியபுராண அடியார்களை நோக்குங்கள்! ஒவ்வொரு அடியார்க்கும் இறைவன் எவ்வளவு துன்பத்தை நல்கிச் சோதனை செய்வித்தார் என்பதை அந்நூல் தெளிவுறுத்திக் காட்டும் என்க.

மலையொத்த துன்பம் நேரினும், அதற்குக் கவலையுறாது வாழ்ந்து, வறுமை இன்னல் வன்மையாக ஆட்கொண்டு மாய்க்கினும், அதற்கு மயங்காது, அவனை சிந்தித்துப் போற்றி, அவனருள் பெற்று, இன்பெய்தியதற்குக் காரணம் வினைத்திட்பம் என அறுதியிட்டுக் கூறலாம். வினைத்திட்பம் என்பது என்ன? ஒரு தொழிலில் திட்பம் என்று



சொல்லப்படுவது ஒருவனுடைய மனத்தின் உறுதியே யாகும்; மற்றவை எல்லாம் வேறானவை. இதை யார் விளக்குகிறார்? உலகப் புலவர் வள்ளுவர்தான்! அவர் வாக்கைக் காண்க.

*வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்*
*மற்றைய எல்லாம் பிற.* (குறள் 1 - அதி 67)

“துன்பத்தின் விலை கொண்டுதான் இன்பத்தை வாங்க வேண்டும்” என்பது ஆங்கிலப் பழமொழி. (All pleasure must be bought at the price of pain faster) பெருந் துன்பமே, இன்பப் பாதையைக் காட்டி, அவ்விடத்திற்கு நம்மைச் சேர்ப்பிக்கிறதெனலாம். இன்னலுற்றவன் பெறும் சுகம் வெயிலின் வெம்மையாற் றோன்றும் துன்பத்தைப் போக்க, குளிர் தூங்கும் பூங்காவை அடைவது ஒக்கும். இன்னற்படிகளைக் கடந்தான் வாழ்க்கை எல்லா வகையாலும் செம்மையுற்று விளங்குகிறது என்பது தெளிவு. பற்றுள்ளங் கொள்ளுங் காலத்தே வேண்டுதல் பலனை அளிக்கிறது.

அடியார்கள் ஆண்டவனைப் பெற எப்படி வேண்டினார்கள் என்பதை ஈண்டு சில உதாரணங்களால் உணர்க. அப்பரடிகளை நோக்குங்கள்! அவர் அருளிய தேவாரம் ஒன்றில் திருப்பாதிரிப்புலியூர் பெருமானை! “தருவாய் சிவகதி!” என்று வேண்டுகின்றார். உண்மை உள்ளத்தினின்றும், அதிகார முறையிலே வேண்டுதலை இறைவனிடம் கேட்டுப் பெறுகின்றார் அடிகள்.

*கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்*
*உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்*
*திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்*
*தருவாய் சிவகதிநீ பாதிரிப் புலியூர் அரனே.* (4ந் திருமுறை)

அப்பரடிகளே மீண்டுமோர் இடத்தில் வேண்டுவது நினைவிற் கொள்ளற்பாலது. “புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரந் தரல் வேண்டுமிவ் வையகத்தே” என்பதே யாகும்.

வேதாந்தத்தின் தெளிவே சைவ சித்தாந்தம் என்று நிறுவிக்காட்டிய தாயுமான அடிகளாரும் தம் முதிர்ந்த அனுபவத்தினின்றும் வெளியிடும் உண்மையை நோக்குக.

*வேண்டுவ படைத்தாய் நுந்தை விதிப்படி புரந்தானத்தைக்*
*காண்டக வழித்தாண் முக்கட் கடவுள்தான் இனையவாற்றால்*
*ஆண்டவனெவனோ என்ன அறிகிலாதகில நீயே*
*ஈண்டிய அல்லல் தீர எம்மனோர்க்கியம்பு கண்டாய்.*

(தேன்முகம் - தாயுமானர்)

நாயன்மார்கள், அடியார்கள், இறைவனை நோக்கி வேண்டும் நிலை யாங்ஙனம் எனக் கண்டோம். இப்பொழுது ஒரு அம்மையார் வேண்டுவதைக் காண்போம். அவ்வம்மை யார்? அவர்தான் மூத்த திருப்பதிகம் அளித்த காரைக் காலம்மையாவர். அவர் என்ன வேண்டுகிறார்? இறவாத இன்ப அன்பு முதலில் வேண்டுகிறார். பிறகு பிறவாமை வேண்டும் என்கிறார். ஒருகால் பிறந்தால், அது நேரம் உன்னை மறவாதிருக்க வேண்டும் என்கிறார். முடிந்த முடிவாக "பெருமானே! நீ ஆடும் பொற்பாதத்தடியில் யான் வீற்றிருக்க நீயருளல் வேண்டும்" எனத் தன் வேண்டுதலை முடிக்கின்றார். அவருடைய கருத்தை, சேக்கிழாரடிகளின் கவிநலத்தால் உணர்தல் பொருத்தமாகும்.

*இறவாதஇன்ப அன்புவேண்டிப் பின் வேண்டுகின்றார்*
*"பிறவாமைவேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்,*
*மறவாமைவேண்டும்; இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி*
*அறவா! நீஆடும்போதுன் அடியின்கீழ்இருக்க" என்றார்.*

—காரைக்காலம்மையார் புராணம்.

இறைவனை நோக்கி வேண்டுதல் நிகழ்த்துகிறோம். அவ்வேண்டுதல் முற்றுப் பெற்று நம்மைச் சேரவேண்டும் என்றால், அதற்கு முன்பு செய்தவம் மிக அவசியமாகும் என்கிறார் பேராசிரியர் வள்ளுவர். அத்தவம், வாழும் வாழ்க்கையிலேயே நோற்றல் முடியும் என்பது அவர்தம் கருத்தாகும்.

> வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
> ஈண்டு முயலப்படும். —(குறள் - 5, அதி - 27)

(கருத்து) விரும்பிய பயன்களை விரும்பியவாறே அடைய முடியுமாகையால் செய்யத்தக்க தவம், இல்லற வாழ்க்கையிலும் முயன்று செய்யப்படும்.



கட்டுரையின் தொடக்கத்திலேயே அவன் தாளை வணங்க அவன் அருள் பெறவேண்டும் என்று கண்டோம். அவன் அருளைப்பெறத் தவம் வேண்டும் என்றே வலியுறுத்துகிறார் உலகப் புலவர் வள்ளுவர். தவம் இல்வாழ்விலேயும் செய்தல் எளிது என்பதை அறிந்த தெய்வப்புலவர் அதன்பால் நம்மை நாட்டங்கொள்ளுமாறு அழைக்கின்றார். பிறருக்குற்ற இன்னலைக் கண்டு இரங்கும் காலத்தும், பிற உயிர்களுக்கு ஊறு நிகழ்த்தாது இருக்குங் காலத்தும், மக்களுக்குத் தவம் வளர்கிறது என்பதையே மற்றோரிடத்திலும் குறளாசிரியர் வலியுறுத்திக் கூறுகின்றார் என்பது உணர்க.

## வேண்டாமை

இது வரையிலே வேண்டுதல் பற்றி ஒருவாறு சிந்தித்தோம். தற்பொழுது வேண்டாமைப் பற்றிச் சிந்திப்போம். உலக மக்கட்கு வேண்டுதல் எவ்வளவு இன்றியமையாததாய் உள்ளதோ, அங்ஙனமே வேண்டாமையும் அமைகிறது. இலவம் பஞ்சு மெத்தையில் துயின்று வழக்கங் கண்டவன் கட்டாந்தரையை விரும்பான்; பேரின்ப நிலையில் செல்வோன் சிற்றின்ப நோக்கை விரும்பான். மிகுதியாக வேண்டும் என்கிற சொல்தான் எல்லார் நாவிலும் தவழும், வேண்டாம் என்பது ஏகதேசமாகவே பயன்படும். பிறன் கைப்பொருளில் சொகுசாக உண்டு வாழும் ஒருவன் தான் வாழும் வாழ்வு தகுதியுடையதல்ல; மனிதனாய்ப் பிறந்தவன் உழைக்கவேண்டும்; அதற்கு மாறாக வாழ்வது மனிதவாழ்வல்லவே! என்ற வேண்டாமை எண்ணம் பிறக்கவேண்டும். உலகிற்படு பொருள்கள் எவற்றைக் கண்டாலும், வேண்டேன்! வேண்டேன்! என்று கூறும் பெற்றி அடியார்களுக்கே அமைந்த தென்பதை அச்சமின்றிப் பகரலாம்.

திருவாத வூரடிகளை நோக்கின், அவர் உலகிற் காண்பன எவற்றையும் விரும்புகிறார் இல்லை. புகழ்வேண்டேன் செல்வம் வேண்டேன் பிறப்பிறப்பு வேண்டேன் சிவம் வேண்டார் தமை நாளுந் தீண்டேன் என்றும், ஊர் வேண்டேன் பேர் வேண்டேன் கற்றுரையான் வேண்டேன் என்றும் கூறுகிறார். அவன் பேரருள் வழியும் கழல்களையே

186891

விரும்புவதாகக் கூறுகிறார். அடிகளாரின் நிலையும், அவர் உள்ளப் பாங்குங் கண்டு உண்மை உணர்க.

வேண்டேன் புகழ்; வேண்டேன் செல்வம்,
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேணடேன் பிறப்பிறப்புச்; சிவம்
வேண்டார் தமைநாளுந்
தீண்டேன் ; சென்று சேர்ந்தேன் ;
மன்னு திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன் ; புறம் போகேன் ;
இனிப்புறம்போக லொட்டேனே.

உற்றாரையான் வேண்டேன்; ஊர்வேண்டேன் ; பேர்வேண்டேன்
கற்றாரையான் வேண்டேன் ; கற்பனவும் இனியமையும்
குற்றாலத்தமர்ந்துறையுங் கூத்தா உன்குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே.—திருவாசகம்

இனி நாம் உலகமறை யளித்த வள்ளலிடம் சென்று அவர் எவ்வெவற்றை வேண்டாம் என்று ஒதுக்குகின்றார் என்பதைக் காண்போம். முதலில் அவர் வேண்டாம் என்று கூறுவது எது? சூது! சூதாடுதலில் வல்லவனாயிருந்து வெற்றியடைந்தாலும், அது கேட்டையே யுண்டுபண்ணும். அதனால் அந்தத் தொழிலை விட்டு விடவேண்டும். சூதாடி வெற்றியால் கிடைத்த பொருளை அனுபவித்தலானது, இரையால் மூடப்பட்ட தூண்டில் இரும்பினை மீன் விழுங்கினாற்போலும் என்பதாம். எப்படி என்றால் இரையாகிய ஊனைப் பொதிந்த தூண்டிலிரும்பினை இரை யென்று உண்டு, மீன் இறத்தல் போலச் சூதாட்டத்தால் வந்த பொருளை நல்வழியால் வந்த பொருள்போல அனுபவிப்பவன் கெடுவன் என்பதாம்.

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற் பொன்மீன் விழுங்கியற்று. (குறள் - சூது - 1)

தமிழ்ப் பெருமகனார் வள்ளுவர், அவாவறுத்தல் என்ற அதிகாரத்தின்கண் பேசும் "வேண்டாமை"யை இங்கு சிந்தித்தல் வேண்டும். ஒரு பொருளையும் இச்சியாதிருத்தலைப் போலும் சிறந்த செல்வம் காணப்படும் இவ்வுலகத்திலில்லை; இவ்வளவுதானா? கேட்கப்படும் தேவருலகத்திலும் வேண்டாமையைப் போன்ற செல்வம் கிடையாது. பிறவாதிருக்க மருந்து எதுவெனின், அவாவறுத்தலாகும். அதையே விழுச் செல்வம் என்று நாயனார் குறிப்பிடுவது ஈண்டு நினைவிற் கொள்ளற்பாலது.



"வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
ஆண்டும் அஃதொப்ப தில்." (குறள் 3 அவாவறுத்தல்)

வேண்டாமையை ஒறுத்தவழி, பேரின்ப நிலையை எய்தினர் ஞானப் பெருமக்களானோர். வேண்டுதல் வேண்டாமை இல்லாத நிலையே இறைவன் நிலையாகும். ஓடும் செம்பொனும் ஒக்க நோக்குங் காலத்தேயே, பிறவியின் வேர் ஆட்டங் கொடுக்க ஆரம்பித்து விடுகிறது எனலாம். ஒக்கநோக்கி வெற்றிபெறுங் காலத்தே, பிறவி அற்றுப் போய், பேரின்ப நிலைக்கு உயிர் இலக்காகுகிறது எனலாம். அப்பெருமானருளை, அவன் கழல் வணங்கும் முகமாய்ப் பெறுவோமாக! உள்ளங்கள் தோறும் அருள் மணம் கமழ்வதாக!

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில. (குறள் - 4, கடவுள் வாழ்த்து).

---

விரிவுரைப்பகுதி

## உண்மைச் சேவை

(அழகு மதியன்)

ஒருநாள் நடுப்பகலில் புகைவண்டி நிலையத்திற்குச் சிறிது தொலைவில் ஒரு விசைவண்டி நிலையத்தில் நின்று கொண்டிருந்தேன். அங்கே பலபேர் விசை வண்டிக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு ஏழைப்பெண் ஒரு பச்சைக் குழவியை மடியில் வைத்துக் கொண்டு அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தாள். அருகிலே ஒரு சிறுபையன் குந்திக் கொண்டிருந்தான். அவன் இரண்டு பாதங்களும் வளைந்திருந்தன. ஆகவே அவனால் நிற்கக் கூடவில்லை. அவனுக்கு வயது இரண்டு இருக்கலாம். பேசவும் இன்னும் தொடங்கவில்லை. கைச்சாடை மட்டும் காட்டும் அறிவுள்ளவனாக இருக்கலாம். பெண்ணோ புகைவண்டி நிலையத்தில்

பிச்சை எடுத்துப் பிழைக்கும் பெண்போல் தோன்றினாள். ஏனெனில் வந்துபோகும் ஆட்களைக் காசு கேட்டுக் கொண்டே இருந்தாள். பார்வைக்கு மலையாள நாட்டுப் பெண் போலத் தோன்றினாலும் நல்ல தமிழ் பேசினதினால் இந் நாட்டிலேயே வெகு காலமாகப் பிழைத்து வந்தவள் என்று நினைக்க வேண்டியிருந்தது.

வெகுநேரம் ஆகியும் அங்கிருந்தவர்கள் ஒருவரும் ஒருகாசும் அவளுக்குக் கொடுக்கவில்லை. இப்படிப்பட்ட பிச்சைக்காரர்களைப் பெருக்குவதில் பயனில்லையென்று நமது பொதுமக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள் என்று நினைத்தேன். குழந்தைகளின் பரிதாபத்தைக் கண்டு ஏதாவது ஒருதுட்டு கொடுக்கலாமென்று என்பையில் கை விட்டேன். துட்டு இருக்கவில்லை. இரண்டணாதான் இருந்தது. அதனைக் கொடுக்க மனம் வராமல் சும்மா இருந்தேன்.

அப்போது ஒரு நடுத்தரப் பெண் வண்டியேற வந்தாள். அந்த நொண்டிப் பையனிடம் உட்கார்ந்து கொண்டு "நீயார், எந்தஊர், அப்பா, அம்மா எங்கே" என்று நயமாய்க் கேட்டாள். அவன் தெருவையும், தெருவில் பறந்து கொண்டிருந்த விசை வண்டிகளையும் சுட்டிக் காட்டினான். பேச்சு இன்னமும் வரவில்லை. அதைப்பார்த்துப் பிச்சைக்காரத் தாய் இவனுக்குப் பேசவராது; கால்நொண்டி என்று சொல்லி அவனை எடுத்து நிறுத்திக் காட்டினாள். அவன் நிற்க முடியாமல் அழுதான். அருகில் இருந்த ஒருவர் ஒரு துட்டு எறிந்தார். அதை அப்பையன் எடுத்துக் கொண்டு அழுகை நிறுத்தினான். உடனே அந்தப் பிச்சைக்காரி கதையைச் சொல்லத் தொடங்கினாள்.

"அம்மா, நான் ஒரு ஏழை. சாப்பாட்டுக்கு வசதியற்றவள். புகைவண்டியருகில் இருந்து கொண்டு பிச்சையெடுத்து வயிறு வளர்க்கிறேன். எனக்கு இந்தக் கைக் குழந்தை ஏழு மாதத்திலேயே பிறந்து விட்டது. இதனை உயிரோடு பாதுகாப்பதே கஷ்டம் இது போதாமல் இன்று காலை இந்தப் பரிதாபச் சிறுவனும் வந்து சேர்ந்து விட்டான். என்ன செய்வது" என்றாள்.

"அப்படியானால், இந்தப் பையன் உன்னுடைய பையன் அல்லவா? அவன் எப்படிச் சேர்ந்தான்?"



"அவன் என்பையன் அல்ல. முகசாடை பாருங்களேன்! காலையில் புகைவண்டி நிலையத்திலே ஒருதிண்ணையிலே இப் பையனை விட்டுவிட்டு யாரோ நகர்ந்து விட்டார்கள். பையன் தன்னந் தனியே அழுது கொண்டிருந்தான். அவனை எவரும் எட்டியும் பார்க்கவில்லை. நானோ ஏழை. குழந்தைகளின் கஷ்டம் எனக்குத் தெரியும். பசியின் கொடுமையை நன்றாய் அறிவேன். கடவுள் இவனையும் வளர்க்கும்படி விட்டு விட்டான் என்று சொல்லி என்னிடம் இருந்த ஒரு துட்டுக்கு அப்பம் வாங்கிக் கொடுத்தேன். அதைத் தின்று விட்டு அழுகை நிறுத்திவிட்டான். பிறகு அவன் என்னை விடவேயில்லை. அவனை எடுத்துக் கொண்டுவந்து இங்கே உட்கார்ந்தேன். உங்களைப்போன்ற தருமவான்கள் ஏதோ காசு கொடுத்தால் நான் உண்ணுகிறது போகலாக அவனுக்கும் கொடுக்கலாம் என்று இருக்கிறேன்" என்று சொல்லித் தன் கதையை முடித்தாள்.

கேட்டுக் கொண்டிருந்த அம்மாவுக்கு மனம் கரைந்து போய் ஒருதுட்டுக் கொடுத்தாள். அதைப் பெற்றுக்கொண்டு பிச்சைக்காரி 'நீங்கள் நன்றாக இருக்க வேண்டும்.' என்று வாழ்த்தினாள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றொரு ஆளும் ஒருதுட்டுக் கொடுத்தான். நானும்கேட்டுப் பரிதாபப் பட்டுக் கையிலிருந்த இரண்டணா கொடுத்தேன். பிச்சைக் காரிக்குச்சொல்ல முடியாத சந்தோஷம். அப்போது விசை வண்டி வந்தது. நாங்கள் ஏறிச்சென்றோம். அப் பிச்சைக் காரியும், அப் பையனும் என்ன ஆனார்களோ அறியேன். ஆனால் அந்தச் சம்பவம் என் நெஞ்சைவிட்டு நீங்கவே இல்லை.

பிச்சைக்காரர்கள் தாங்கள் பிச்சை யெடுப்பதன்றி எளிதில் பிச்சை யெடுப்பதற்காக வேறு பிள்ளைகளையும் எடுத்துக் கொண்டு பிறருடைய கருணை கடாட்சம் பெற வேண்டி இவ்விதத் தந்திரங்கள் செய்கிறார்கள். இந்தப் பெண் கூறுவது உண்மையானால், அவள் நல்லுணர்ச்சியின் மேலும் செய்யலாம். அல்லது வேறு காரணங்களைக் கொண்டும் செய்யலாம். நல்ல எண்ணம் இருந்தால் நாம் கொடுப்பது சரியே. இல்லாவிடில் நாம் தரும் கொடை வீணே. ஆனாலும் இவர்களில் பல பேர்கள் எளிதில் காசு பெற வேண்டிக் குழந்தைகளையோ குருடர்களையோ துணை கொண்டு போவதும் கேள்விப் பட்டிருக்கிறோம்.

அவ்விதமாகத் துணைசேர்த்துக் கொள்வதில் பலமுறை ஒழுங்கு தவறி நடப்பதுண்டு. அந்தவகையில் திக்கற்ற குழந்தைகள் பிறக்கிறார்கள். இவ்விதம் உற்பத்தியாகும் குழந்தைகள் தொடக்கம் முதல் பிச்சைக்காரர்களாகவே வளர்க்கப் படுகிறார்கள். பெரும்பான்மையாக இவ்வாறு உற்பத்தியாகும் குழந்தைகளுக்குப் பெற்றெடுத்த தாய் தந்தையரின் நோய்கள் ஒட்டிக் கொள்கின்றன. அந் நோய்கள் நீர்மேகம் பொருந்தியனவாக இருக்கும். மிகப் பொல்லாத தொழுநோய்கள் (குஷ்டம்) கூடவந்து சேரும். உலக சமூகத்தையே அரித்தெடுக்கும். தொழு நோய்கள் இந்தவிதமாக உற்பத்தி செய்யப் படுகின்றன. ஆகவே இவ்வித மக்களுக்குக் கருணை காட்டி, காசு கொடுத்துப் பெருக்குவது சரியா என்ற கேள்வி நெஞ்சில் எழும்பியது. இவ்வித சங்கடமான நிலை அறிந்து தானே, "பாத்திர மறிந்து பிச்சை கொடு" என்ற பழமொழியும் எழுந்ததோ என எண்ணினேன். இவ்விதமான எண்ணங்கள் அன்று முழுதும் என்னெஞ்சைத் துளைத்து வருத்திக் கொண்டிருந்தன. பிச்சைக்காரர்களைக் கண்டு பரிதபிக்கிறதா அல்லது குறிக்கோள் எண்ணிக் கடிய நெஞ்சராகி இருப்பதா என்பதே அப்போது எழுந்த கேள்வி.

தற்போது தமிழ்நாட்டிலே தோன்றியிருக்கும் பிச்சைக்காரர் தொல்லை 120 ஆண்டுகளுக்குமுன் ஆங்கில நாட்டிலே இருந்தது. அதனை நீக்குவதற்குச் சார்ல்ஸ் டிக்கன்சு போன்ற அறிஞர்கள் நூலாலும், கவிதையாலும், பேச்சாலும் போராடினார்கள். 'எளியவர் திட்டங்கள்'(Poor Laws) இயற்றப்பட்டன. தற்போது பிச்சை எடுப்பது அந்நாட்டில் இல்லை. அது தண்டிக்கக்கூடிய குற்றமாகும். கீழ்நாடுகளைத் தவிர நாகரிகம் பெற்ற எந்நாட்டிலும் பகிரங்கமாகப் பிச்சை எடுப்பது கிடையாது. பிச்சைக்காரர் தொழிற்சாலைகளும் அனாதை விடுதிகளும் அங்கே தோன்றி எல்லாருக்கும் வேலைதருகின்றன. நமது நாட்டில் இப்போது தான் இவ்வகைச் சட்டங்கள் பிறக்கின்றன. ஆனால் அவைகள் இன்னும் செயல் முறைக்கு வரவில்லை. ஐந்து ஆண்டுகளாகச் செய்யும் முயற்சிகள் ஒரு சிறிதும் முன்னேறவில்லை.

சில நாட்களுக்கு முன் சென்னை வானொலியில் ஒரு செய்தி ஒலி பரப்பப் பட்டது. வெளிநாட்டு இளைஞர்கள் நால்வர் சென்னையைப் பார்த்துவிட்டுத் தங்கள் எண்ணங்களை வெளியிட்டார்கள். அவர்களில் ஒருவர் கிழக்கு ஆப்பிரிக்கா நீகிரோ மாணவர். அவர் சென்னையில் கண்ட காட்சிகளைப் பற்றிப் பேசியபோது "இங்கே எந்தப் பொது இடத்தில் பார்த்தாலும் பிச்சைக்காரர் தொந்தரவு சகிக்க முடியவில்லை. எங்கள் ஊர் சின்னது. ஆனாலும் அங்கே இந்த உபத்திரவம் இல்லை" என்றார். மற்றொருவர் பிலிப்பைன் தீவில் இருந்துவந்த ஒருமாணவர். அவரும் அவ்வாறே கூறினார். அநாகரீகர் என்று நாம் கூறும் இந்த தேசத்தார்கள் நம் நாட்டு நிலைமையை இவ்வளவு கேவலமாகக் கூறினால் நாம் வெட்கப்படவேண்டாமா? இதற்கு என்ன செய்தோம்?



சில நாள்களுக்கு முன் கோவையில் ரோட்டரி கிளப் கூட்டத்தில் நகராட்சி அலுவலாளர் 'பிச்சைப் பிரச்சனை' என்பதைப்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதில் சில அரிய கருத்துக்களை எடுத்துச் சொன்னார். அவர் சொன்னதின் சாரமாவது.

"நமது நாட்டில் எக்காலமும் அறம்செய்வது மக்களின் கடமைகளில் ஒன்றாக இருந்தது. பொது மக்கள் அறச் சாலைகளைக் கட்டினார்கள். அரசர்கள் அதற்காக ஊர்களைத் தானமாக வழங்கினார்கள். கொங்கு நாட்டில் முடவாண்டி சத்தியமங்கலம் அப்படிப்பட்ட இனாம் கிராமங்களில் ஒன்று. அதன் வரியிலிருந்து 32 முடவாண்டிகளும், 42 காலாடிகளும் நிரந்தரமாகக் காப்பாற்றப்பட்டார்கள். ஆங்கிலர் ஆட்சிக்கு வந்த பிறகு அதன் நிகர வரும்படியான 1200 ரூபாயைக் கோவை நகரசபைக்குக் கொடுத்து அந்த அறத்தை நடத்தச் சொன்னார்கள். கோவைச்சபை அதனை நடத்தி வருகின்றது. முதலில் 50 ஏழைகள் அந்த நிலையத்தில் (லங்கர்கானா) இருந்தார்கள். பிறகு அவ்வெண் 10-க்குக் குறைந்துவிட்டது. இப்படியிருக்க சென்னை அரசியலார் பிச்சைத் தடுப்புச் சட்டம் 1945-ல் இயற்றினார்கள். எங்கே பிச்சைக்காரர்களின் விடுதி கட்டப்பட்டதோ அங்கே அச்சட்டம் அமுலுக்கு வரும் என்ற நிபந்தனை இருந்தது. அதனை அனுசரித்து கோவையில் 1947-ல் ஒரு பிச்சைக்காரர் விடுதி கட்டப்பட்டு நகரசபைக்குத் தரப் பட்டது. அது 3336 ரூபாய் செலவில் நடத்தப்பட்டு வரு

கிறது. கோவைக்கு இது போதவே போதாது; சுமார் 60 பிச்சைக்காரர்களுக்காவது அங்கே ஏற்பாடுசெய்தாலன்றிப் பயனில்லை.

அண்மையிலே கணக்கு எடுத்ததில் கோவையில் 700 பிச்சைக்காரர்கள் (453 ஆண், 347 பெண்) இருக்கிறார்கள். அவர்களில் உண்மையானவர்களுக்கு அதாவது சத்தியற்றவர்களுக்கு விடுதி அமைத்தல் நல்லது. அதற்காகப் பொது மக்கள் ஆண்டு ஒன்றுக்கு 10 000 ரூபாய் தந்தால் சட்டத்தை எளிதில் செயல்முறைக்குக் கொண்டுவரலாம்" என்றார்.

ஆட்சியாளர் சொன்ன இந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு கூட்டத்திற்கு வந்த பல அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள். இவ்வித அறச்சாலை ஒன்று நிறுவினால் அனாதைக் குழந்தைகளுக்கு ஒரு விமோசனமும் கிடைக்கும். ஏழைப் பெற்றோர்களும் குற்றங்களைச் செய்யவும் துணியார் அல்லவா?

மேலே கூறிய கூட்டத்திற்குப்பின் கோவை வட்டத்துக் கலெக்டர் அவர்கள் பொது ஜன ஊழியர்களின் கூட்டம் ஒன்றுகூட்டி அதில் பிச்சைக்காரர்களின் பிரச்சனையை எழுப்பினார்கள். அப்போது அவர்கள் எடுத்துக் கூறியதாவதுகோவையில் உள்ளவர்களாகக்கூறப்படும் 700 பிச்சைக்காரர்களில் 240 பேர் மட்டும் உதவி பெறத் தகுதியாக இருப்பார்கள். இவர்களுக்கு வெவ்வேறான நிலையங்கள் வேண்டும் நோயாளிகளுக்கு ஆஸ்பத்திரி, வேலைசெய்யக் கூடியவர்களுக்குத் தொழிற்சாலைகள், அங்கவீனர்களுக்கு லங்கர்கானா! தெருப்பிள்ளைகளுக்கு அனாதை விடுதி இவைகளை ஏற்படுத்தவேண்டும். இவர்கள் ஒருவரோடு ஒருவர் கலக்கக்கூடாது. கோவையில் இடம் இருக்கிறது. புதுக்கட்டடங்களும் ஆண்டுச் செலவும் வேண்டியிருக்கும். ரூபா 40 ஆயிரம் கட்டடங்களுக்கும் ஆண்டுக்கு ரூபா 6000 செலவுகளுக்கும் வேண்டும். இத்தொகைகளைச் செல்வர்கள் தந்தால் இந்த இயக்கத்தை நன்றாக நடத்தலாம் என்று கூறினார். பிறகு நான்கு குழுக்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. அவர்கள் பிரசாரம், பணம் வசூல் முதலியவைகளில் ஈடுபடும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். இந்த முறையில் இயக்கம் நடந்தால் விரைவில் பிச்சைக்காரர்களின்



தொகையைக் குறைத்தும் நீக்கியும் விடலாம். அதுவே உண்மையான அறமும் ஆகும்.

1945-ல் பிச்சைக்காரர்கள் தடுப்புச் சங்கம் ஏற்பட்டும் அதனைச் செயல் முறையில் கொண்டுவர எவரும் பாடு பட்டதாகத் தெரியவில்லை. பொது ஊழியச் சங்கங்கள் நமது நாட்டில் எவ்வளவோ இருக்கின்றன. அவைகள் தங்கள் கூட்டங்களை நடத்துவதாக அடிக்கடி நாம் பத்திரிகைகளில் படிக்கிறோம். பெரிய தலைவர்களை அழைத்து மிகச் சிறப்பாக ஆண்டு விழாக்களை நடத்துகிறார்கள். ஆனால் அனாதை ஆசிரமங்களும் பிச்சைக்காரர்களின் விடுதிகளும் எத்தனை இருக்கின்றன. அவைகளில் எத்தனைபேர் மீட்கப்படுகின்றனர். இந்தக் கணக்கைப் பார்த்தால் நாம் வெட்கப்படவேண்டும். பிச்சைத் தடுப்புச் சட்டம் நான்கு நகரங்களில் மட்டும் தொடங்கப்பட்டனவாம். அந்த நான்கிலும் செவ்வையாக நடைபெறவில்லை யென்று கலெக்டர் குறிப்பிட்டார். நாட்டின்மீது உண்மையான அன்பு இருக்கும்பட்சத்தில் இவ்வாறு இந்தக் கேள்வியை அலட்சியமாக விட்டுவிடலாமா? இதனை ஈரநெஞ்சுள்ள மக்கள் கவனிக்கவேண்டும்.

இந்து சமயத்தில் இவ்வாறாக இருந்தால் ஏனைய சமயத்தவர்கள் சும்மாயிருக்கிறார்களா சற்று ஆராயுங்கள். நமது சகோதரர்களான கிருத்தவ நண்பர்கள் ஒரு குழந்தையையாவது, ஒரு பெரியவனையாவது பிச்சை எடுக்கவிடுவதில்லை. தகுந்த விடுதிகளில் கொண்டுபோய்ச் சேர்த்துப் படிப்பும், ஊதியமும் தருகிறார்கள். நாமோ அவ்வாறு செய்வதில்லை. அவர்கள் தம் குழந்தைகளைப் பாதுகாப்பதுமட்டும் அன்றி, நமது குழந்தைகளையும் பாதுகாக்கிறார்கள். நமது மக்களோ வெறும் பொறாமைப்படுகிறார்களே ஒழிய செயல் முறையில் எந்த உதவியும் செய்வதில்லை

சைவசமயத்திலோ பல செல்வீக மடங்கள் இருக்கின்றன. இவைகள் வெகு நன்றாக மேற்சொன்ன விடுதிகளை நடத்தமுடியும். இதுவரை தருமபுர ஆதீனத்தார்களைத் தவிர வேறு எந்த ஆதீனத்தார்கள் இந்த அறத்தைக் கனவிலும் நினைத்தார்கள்? தருமபுரத்து ஆதீனத்தார்கள் தங்கள் ஆலயமாகிய வைத்தீசுவரன் கோயிலை ஒட்டி ஒரு அனாதைவிடுதி ஏற்படுத்தியிருப்பதாக அறிவோம். அதைப்

போலவே மற்ற ஆதீனக் கோயில்களும் அனாதை இல்லங்களை ஏற்படுத்திப் பிச்சைத் தொல்லையை நாட்டிலிருந்து நீக்குவார்களாக !

தரும சிந்தனை உள்ள ஏனைய செல்வர்களும் பலபேர் கூடிப் பொது நிதி ஏற்படுத்தி அவரவர்கள் ஊர்களில் இவ்வித அறச்சாலைகளை ஏற்படுத்தி நாட்டிற்கு நன்மை தேடிப் புண்ணியம் பெறுவார்களாக !

---

## செய்தித் திரட்டு

3–5–53 கோவைத் தமிழ் சங்கத்தில்—திரு. C. M. R. செட்டியார் தலைமையில் ஆசிரியர் ஆனந்த ரங்கராவ் "தென்னாட்டுக் கோயில்கள்" என்னும் பொருள் பற்றி விரிவுரை செய்தார்.

5–5–1953 திரு. R. K. சண்முகம் செட்டியார் மறைவு:— கோவை நகர அறிஞர், தமிழ் நாட்டில் சிறந்த கல்வியாளர், இந்தியாவில் பொருளாதார நிபுணர், உலகில் ஓர் சிறந்த அரசியல்வாதி; தமது 61–ம் வயதில் கயிலை எய்தினார். பொருள் படைத்தவராயினும் வள்ளன்மை மிகுந்தவர். சமயத்தில் ஈடுபட்டு அறம் செய்திருக்கின்றார். கல்வியில் ஈடுபட்டுத் தமது அன்னை பேரில் உயர்தரப் பள்ளி ஒன்று நிறுவியிருக்கின்றார். இசையில் ஈடுபட்டுத் தமிழ் இசைச் சங்கத்திற்கு ஓர் சிறந்த நிலையம் உண்டாக்கினார். தமிழ்ப் புலமையில் ஈடுபட்டுப் பேரூர் சாந்தலிங்கர் கல்லூரிக்குத் தலைமை வகித்து 5000 பொன்னும் வழங்கினார். இன்னும் பல அறங்கள் செய்யவும் இருந்தார். ஆனால் இறைவன் விரைவில் அழைத்துக்கொண்டான். அவனுடைய திருவடியில் அவருடைய ஆன்மா அமைதி பெறுவதாக.

7–5–53 அப்பர் திருநாள் தமிழ் நாடெங்கும் நடைபெற்றது. கோவைத் தமிழ்ச் சங்கத்தில் சிவக்கவிமணி தலைமையில் திரு. சி. பி. முத்துசாமி செட்டியார் அப்பரைப் பற்றிப் பேசினார்.

9–5 53 முதல் 5 நாட்கள்-இரத்தின விநாயகர் ஆலயம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பெரியார் தலைமையில் பன்னிரு திருமுறைகளைப் பற்றி முறையாகப் பேச்சுகள் நடந்தன. அடுத்த நாள் கிருத்திகை உற்சவத்தில் குமாரசுவாமியத்தைப் பற்றிய பேச்சு நடந்தது.



12-5 53 முதல் 15 5-53 வரை-சுசீந்தரம் தேவஸ்தானத் தேவாரப் பாடசாலை 12 வது ஆண்டு நிறைவுவிழா: திருவாளர்கள் - ஈசான சிவாசாரியார், ஆறுமுகநாவலர், முத்து. சு. மாணிக்கவாசகமுதலியார், நடேசமுதலியார், சேதுப்பிள்ளை முதலியோர் சமயச் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

15–5-53 அருள்நெறித் திருக்கூட்டம் தஞ்சை ஒன்பதுவேலிக் கிராமத்தில் குன்றக்குடி சுவாமிகள் தலைமையில் பல பேச்சுக்களும், அன்று மாலை திருமதி புஷ்பம்மாள் அவர்களால் மாணிக்கவாசகரைப் பற்றிய பேச்சும் நடைபெற்றன.

23–5-53 தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை 69-வது ஆண்டு நிறைவுவிழா: தலைவர் மாணிக்கவாசகத் தம்பிரான். ஒளவை துரைசாமி பிள்ளை, ஈரோடு மீனாட்சி சுந்தரனார், ஆறுமுக நாவலர் முதலியோர் கலந்துகொண்டார்கள்.

24-5-53 கோவைத் தமிழ்ச் சங்கத்தில் திரு. Dr. N. சுப்பிரமணியம் தலைமையில் திரு. டி. ஆர். முத்துகிருஷ்ண பிள்ளை "திருவிளையாடற் புராணம்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்.

24.5-53. திரு. பண்டித பஞ்சநதம் பிள்ளை அவர்கள் மணிவிழா. திருச்சிக்கோட்டை, நூற்றுக்கால் மண்டபத்தில் திரு டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் கணக்கற்ற வாழ்த்துப் பாக்களும், ஆசி உரைகளும் நிகழ்த்தப்பட்டன. திரு. கீ. இராமலிங்க முதலியார், "சுந்தர வாழ்வு" என்பதைப்பற்றியும், திரு. சி.எம்.ஆர். செட்டியார், "வாழ்வில் சமயம்" என்பதைப் பற்றியும் பேசினார்கள். மௌன மடத்தில் அறுசுவை விருந்தோடு விழா இனிது முடிந்தது. பிள்ளை அவர்கள் அநேக தலவரலாறுகளையும், அற்புதக் கனி என்ற நூலையும் எழுதியிருக்கின்றார்கள். நமது சமாஜப் பணியில் மிகவும் ஈடுபட்டவர்.

24-5-53. முதல் 7 நாள் சைதாப்பேட்டை, காரணேசுவரர் 22-ம் ஆண்டு திருமுறைப் பெருவிழா. நாள்தோறும் பல பெரியார்கள் இவ்விழாவில் பங்கெடுத்துக்கொண்டார்கள்.

24-5-53 முதல் 8 நாள் சைதாப்பேட்டை, திருவள்ளுவர் விழா – 7-ம் ஆண்டு நிறைவு விழா. மிகச்சிறந்த தமிழ்ப்பெரியார்கள் ஒவ்வொரு நாளும் சொற்பொழிவாற்றினார்கள்.

25-5-53 முதல் 10 நாள் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு, தருமபுரம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சமயக் கோட்பாட்டை முன்னிட்டு சிறந்த அறிஞர்களின் தலைமையில் தமிழ் அறிஞர்கள் பற்பல சமயப் பொருள்களைப் பற்றிப் பேசினார்கள். இசைவிருந்துகளும் நாடகங்களும் நடைபெற்றன.

25-5-53. பாகம்பிரியாள் மாதர் கழகம், தூத்துக்குடி. வெள்ளிவிழா, திருமதி. பிருந்தாதேவி அம்மையாரின் தலைமையில் திரு. ஈசுவரவடிவு அம்மையாரும், திரு. குழந்தை அம்மையாரும் பேசினார்கள்.

27-5-53. பொம்மையபாளையம் சிவஞானபாலையசுவாமிகள் குருபூஜை. அறிஞர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

27-5-53. குன்றக்குடி ஆலயம் வைகாசி விசாகத் திருநாள் தமிழ்க்கவி அரங்கம் நடைபெற்றது. பிறகு திருவள்ளுவர் திருநாள் இரண்டு நாள் நடைபெற்றது.

28-5-53. மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனம்—குருபீட இளவரசுப் பட்டாபிஷேகம், திருவருள் கே. வி. சோமசுந்தரம் அவர்கள் இளவரசுப்பட்டம் பெற்றார்கள். திருவருள் தவநெறி மன்றத்தில் பட்டாபிஷேகம் நடத்தின பிறகு பல பெரியார்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

28-5-53. திருச்செங்கோட்டு வேலவர் கிருத்திகை உற்சவ சங்கம் 10-வது ஆண்டு. திரு. கீ. இராமலிங்க முதலியார் தலைமையில் பல பெரியார்கள் பேசினார்கள். நான்கு நாள் கூட்டம் நடைபெற்றது.

28-5-53. முதல் 3 நாள் திருவள்ளுவர் கழகம் தென்காசி 26வது ஆண்டு நிறைவு விழா. திரு. சேதுப்பிள்ளை, குன்றக்குடி சுவாமிகள் இவர்கள் தலைமையில் பல பெரியார்கள் பேசினார்கள்.

30-5-53. திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபை, மலைக்கோட்டை. ஞானசம்பந்தர் திருநாள். பல அன்பர்கள் பேசினார்கள்.

31-5-53. சைவ சித்தாந்த சமாஜம் மாதாந்திரத் திருவிழா. கோவை நகரத்தில் திரு. C. S. R. முதலியார்



அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீ. இராமலிங்க முதலியாரும், ச. மீனாட்சிசுந்தரனாரும் பேசினார்கள்.

31-5-53. குமர குருபர சுவாமிகள் 265ஆம் ஆண்டுத் திருநாள். பல பெரியார்கள் தில்லை விழாவில் கலந்துகொண்டார்கள்.

31-5-53. மதுரை திருவருள் தவநெறி மன்றம் சமய வளர்ச்சி மாநாடு தவத்திரு. இளவரசர் சோமசுந்தரர் தலைமையில் நடைபெற்றது.

---

## சென்னையில் சேக்கிழார் விழா

பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணத்தை இயற்றிய தெய்வச் சேக்கிழார்பெருமானாரின் திருவிழா திரு. மறை. திருநாவுக்கரசின் நல்லுழைப்பால் சென்னைப் புரசைவாக்கம் கங்காதரேசுவரர் கோயிலுக்கு எதிரிலுள்ள நகராண்மைக்கழகச் சிறுவர் பள்ளியில் 1-6-53 முதல் 3-6-53 வரை சிறப்பாக நடந்தேறியது. முதனாள் விழா தமிழிசைவாணர் திரு சி. சங்கரலிங்கம் அவர்களின் தமிழ்மறையோடு தொடங்கப்பெற்றது. திரு. ஜெ. சிவசண்முகம்பிள்ளை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, திரு. பக்தவத்ஸலம் அவர்கள் தொடக்கஉரை இயற்ற, திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் தலைமையுரை ஆற்ற, விழா ஆரம்பிக்கப்பட்டது. அன்று வித்வான்-திரு. இளவழகனார், திரு. திருவாசகமணி-கே.எம். பாலசுப்பிரமணியம் முதலியவர்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. இரண்டாம் நாள் விழாவின் தொடக்கவுரை, சென்னை மந்திரி திரு. சி. சுப்பிரமணியம் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. இரண்டாம் நாளில் பெருஞ்சொல் விளக்கனார் அ. மு. சரவண முதலியார், திரு. மறை. திருநாவுக்கரசு, திருவாசகமணி ஆகியோர். சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். மூன்றாவது கடைசி நாள் விழா திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் வாழ்த்துரையோடு ஆரம்பிக்கப்பட்டது. திருவாளர் சீனிவாச இராகவன் அவர்களின் தலைமையுரைக்குப் பின்னர் திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. திருவாசகமணி, திரு. ச. கண்ணன் அடிகள் முதலியவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர். தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறல், கடவுள் வாழ்த்தோடு இனிதே முடிந்தது.

186891

## சமாஜ வெளியீடுகள்

| | ரூ. | அ |
|---|---|---|
| பெரியபுராணம்—அகராதியுடன் ... | 3 | 0 |
| நாலாயிர திவ்யப் பிரபந்தம் ... | 3 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ... | 1 | 0 |
| திருவாசகம் மூலம் ... | 0 | 4 |
| திருப்போரூர்ச் சந்நிதி முறை .... | 0 | 12 |
| திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு | 7 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்) ... | 0 | 8 |
| சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல. ... | 0 | 2 |
| சிவஸ்தல யாத்திரை மஞ்சரி ... | 0 | 4 |

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

### குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்) ஒன்று ஒரு ரூபா வீதமும், முழு மலரல்லாத தனி இதழ் ஓர் அணா வீதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 4 (1931), 14 (1941), 15 (1942), 24 (1951)].

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 53, Thiruvalluvar Street (Zones Road), Saidapet, Madras-15. P I. Card No. M. S. 8)